கூளப்ப நாயக்கன் காதல்

பதிப்பாசிரியர்
மு. அருணாசலம்

சக்தி

T10970
R003H06
T
10970

கூளப்ப நாயக்கன் காதல்

ஆசிரியர்

சுப்பிரதீபக் கவிராயர்

பதிப்பாசிரியர்

மு. அருணாசலம், எம். ஏ.

சக்தி காரியாலயம்

சென்னை :: மதுரை

முதற் பதிப்பு ஆகஸ்டு, 25, 1943 (௧௨௫௦)

031,1 KUL
H3

சகல உரிமைகளும்
சக்தி காரியாலயத்தாருக்கே

கமர்ஷியல் பிரிண்டிங் அன் பப்ளிஷிங் ஹௌஸ், ஜி. டி. சென்னை.

பதிப்புரை

பழந் தமிழிலக்கியங்களை நம் மக்கள் விரும்பிப் பயிலவேண்டும் என்ற நோக்கத்தோடு இந்நூலை முதலாவதாக வெளியிடுகிறோம். மு. அருணாசலம் அவர்கள் அரிய முன்னுரை குறிப்புரைகளோடு இந்நூலைப் பரிசோதித்துத் தந்திருக்கிறார்கள்.

சக்தி காரியாலயத்தார்

இப் பதிப்பாசிரியரின்
ஏனைய நூல்கள்

யான் பெற்ற இன்பம்
(கட்டுரைகள்)

முக்கூடற் பள்ளு
(குறிப்புரையுடன்)

உரிமையுரை

தமிழ் முன்னேற்றத்திற்கும் தமிழர் முன்னேற்றத்திற்கும்
அடிகோலிய

திரு. வி. கலியாணசுந்தர முதலியார் அவர்கள்

அறுபதாண்டு நிறைவு நாளாகிய 25-8-1943 அன்று அவர்களுக்கு

இந்நூல் உரிமை செய்யப் பெறுகிறது.

உள்ளுறை

முன்னுரை	... க
நூல்	... உக
தனிப்பாடல்கள் :	
கூளப்ப நாயக்கன்	... எஎ
குன்னரங்கன்	... எகூ
பெயரகராதி	... அ0

முன்னுரை

க

களவொழுக்கம்

பொருளிலக்கணஞ் செய்த தமிழாசிரியர்கள், அகத்திணையிலே களவு கற்பு எனக் காதலொழுக்கத்தை இரு வகையாகப் பிரித்து, இவ்விரண்டினும் களவு மணமே சிறப்புடையதென்று கூறுகிறார்கள். 'இறையனார் அகப்பொருள்' என்ற இலக்கணத்துக்கு உரையெழுத வந்த உரைகாரர், அவ்விலக்கணத்துக்குக் 'களவியல்' என்று பெயர் அமைந்ததன் காரணத்தைச் சொல்லும்போது, "நூல் பெயர் பெறுமிடத்துப் பல்விகற்பத்தாற் பெயர் பெறும். என்னை?......சிறப்பினாற் பெயர் பெறுதலும் என;......சிறப்பினாற் பெயர் பெற்றது களவியலென்பது. என்னை? களவு கற்பு என்னும் கைகோள் இரண்டனுள், களவினைச் சிறப்புடைத்தென்று வேண்டும் இவ்வாசிரியன். என்னை?

முற்படப் புணராத சொல்லின் மையிற்
கற்பெனப் படுவது களவின் வழித்தே

என்று வேண்டுதலின் (15-ம் சூத்திரம்), கற்பு, களவு போல ஒரு தலையான அன்பிற்றன்று" என்றெழுதுகிறார் (1-ம் சூத்திரவுரை).

இவ்வாருக, ஆசிரியர்கள் மிக்க சிறப்புடையதாகச் சொல்லும் களவு மணம் என்பது யாது?

அழகாலும் அறிவாலும் செல்வத்தாலும் குலத்தாலும் பெருஞ் சிறப்புடைய இளைஞனொருவன் வேட்டையாடும் பொருட்டு, தனியனாக ஒரு மலைச்சாரலுக்கு வருகிருன். இளம் பெண்ணொருத்தி, அழகாலும் பிறவற்ருலும் ஒப்புயர்வற்றவள், மலைச் சாரலிலே தினைப்புனங் காத்துவருகிருள். இவள், ஒருநாள் தன் தோழியரோடு விளையாடிய போது, எப்படியோ அவர்களைப் பிரிந்து செல்கிருள். செல்பவள் அவ்விளைஞன் முன்பு தற்செயலாகத் தோன்றுகிருள். ஊழ்வயத்தால் இருவர் உள்ளமும் கலக்கிறது. அவ்விடத்திலேயே அவர்கள் கூடி மகிழ்ந்து, பின்னர் ஒருவகையிலே பிரிந்து தத்தம் இருப்பிடம் செல்கிருர்கள். தன் பாங்கன் துணைகொண்டும், அவளது பாங்கியின் துணைகொண்டும், தலைவன் பின்னரும் பலமுறை தலைவியைத் தனித்துக் கண்டு கூடி மகிழ்கிருன். நாளடைவிலே இவர்கள் களவொழுக்கம் வெளியாகிறது. ஒருநாள் தலைவன், பாங்கியின் துணைகொண்டு, தலைவியைப் பிறரறியா வண்ணம் தன்னூருக்கு அழைத்துச் செல்கிருன். தலைவியின் பெற்ருேர் இதையறிந்து முதலிலே கோபமும் வருத்தமும் அடைந்தபோதிலும், தங்கள் பெண் கற்பு நெறிப்பட்டாள் என்பதைப் பின்னர் உணர்ந்து, ஒருவாறு மனந் தேறுகிருர்கள்.

அகத்திணையிற் பயின்றுவரும் களவு கற்பு என்ற இரண்டின் பொருட் சுருக்கம் இவ்வளவே. இதனுள் சிறப்பாகக் கவனிக்கத் தக்கது, தலைவனுக்கும் தலைவிக்கும் முதலிலே சிறிது காலம் களவொழுக்கம் நிகழ்ந்த பிறகுதான் மணம் நடைபெறுகிறது என்ற செய்தியாகும்.

பழங் காப்பியங்கள்

சங்க நூல்களிலும் தொல்காப்பியத்திலும் இக்களவொழுக்கத்துக்குச் சிறப்புக் கற்பித்திருப்பதைக் காண்கிறோம். இவற்றின் பின் வந்த காப்பியமாகிய சிலப்பதிகாரத்தில் களவு முறையை நாம் காணவில்லை. கோவலனும் கண்ணகியும், களவொழுக்கம் இன்றியே, தங்கள் பெற்றோரால் மணம் செய்விக்கப் பெறுகிறார்கள். ஆனால், சிலப்பதிகாரத்துக்குச் சிறிது காலத்துக்குப் பின்னாலே (ஒன்பதாம் நூற்றாண்டில்) காப்பியம் செய்யவந்த திருத்தக்கதேவருக்கு இக் கற்பு மணம் மட்டும் போதவில்லை; களவொழுக்கத்தைத் தேடிப்போகிறார் இவர். இலக்கணத்திலே களவைச் சிறப்பாகச் சொல்லியிருப்பதனாலே, தமது காப்பியத்திலே களவைப் போற்றவேண்டும் என்று எண்ணி வலிந்து புகுத்தியும் இருக்கிறார். சிந்தாமணியிலே பதுமையார் இலம்பகத்தைப் படிக்கும்போது நமக்கு இத்தகைய எண்ணமுண்டாகிறது.

சீவக சிந்தாமணியின் கதாநாயகன், அரசிளங்குமரியான பதுமையைப் பாம்பு தீண்டிற்றென்றறிந்ததும், அவளிருந்த அரண்மனைக்குச் சென்று, அவளுடம்பைத் தைவந்து விடந்தீர்த்து அவளை உயிர்ப்பிக்கிறான். இருவரும் ஒருவர்மேலொருவர் காதல் கொள்ளுகிறார்கள். இந்த நிலையிலே, ஆசிரியர் செய்யவேண்டியதென்ன? கலியாணமாயிற்று என்று கதையை முடிக்கவேண்டுவதுதான். ஆனால், அவர் என்ன செய்கிறார்?

பதுமை பொழிலுக்குச் சென்று விளையாடுகிறாள். சீவகன் அவளைக் காண்கிறான் (காட்சி); 'இவள் யார்? மலைமகளா, அலைமகளா, கலைமகளா, இயக்கியா?' என்று ஐயுறுகிறான் (ஐயம்). பிறகு, அவளணிந்திருந்த மாலை வாடலாலும், அவள் கண் இமைத்தலாலும், கால் நிலந்

தோய்தலாலும், அவள் தேவலோகப் பெண்ணல்லள், பதுமையே என்று தெளிகிறான் (தெளிவு). அங்கேயே அவளைக் கூடுகிறான் (இலக்கணப்படியுள்ள இயற்கைப் புணர்ச்சி). பின்னர் இருவரும் பிரிகிறார்கள். மறுநாள் முறைப்படி இருவருக்கும் கலியாணம் நடைபெறுகிறது.

இலக்கணத்திற் சொல்லியபடியே முதலிலே களவொழுக்கத்தைத் தனிப்படச் சொல்லித்தான் பிறகு கற்பு மணத்தைச் சொல்லவேண்டும் என்று திருத்தக்கதேவர் எண்ணிவிட்டார். அதனால்தான் சீவகன், தான் முன்னே கண்டு மெய்தொட்டுப் பயின்று நன்றாய் அறிந்திருந்த பதுமையை, மறுபடியும் கண்டு ஐயுற்றுத் தெளிந்து கூடும்படி அவர் செய்திருக்கிறார். இதுவே 'தேவர் பண்ணிய தீந்தொடை யின்சுவை - மேவர் தென்தமிழ் மெய்ப்பொருள்' (அதாவது, யாழையுடைய கந்திருவர் பண்ணிய இனிய கந்திருவமணமே தமிழின் அகப்பொருளிற் சிறந்த பொருள்) என்கிறார் (சிந்தாமணி, 1335).

பிற்காலம்

இவர் காலத்துக்குப் பிறகு, இக் களவொழுக்கத்தை இலக்கியத்தில் சிறப்பித்துச் சொல்வாரைக் காணோம். தமிழிலே சிறு காப்பியங்களும் பிரபந்தங்களும் எத்தனையோ தோன்றினும், இக் களவொழுக்கத்தை இந்த முறையிலே சொல்லுகின்ற நூலெதுவும் பதினேழாம் நூற்றாண்டுவரையில் எழவில்லை. அந்த நூற்றாண்டிலே, காதல் என்ற புதுவகைப் பிரபந்தமொன்று எழுந்தது. இதன் பொருளமைதியானது அனேகமாக மேற்சொன்ன களவொழுக்கத்தின் இலக்கணத்தைத் தழுவியிருக்கிறது. களவைப் போலவே இதுவும் ஒரு மலைச் சாரலிலே, அதாவது குறிஞ்சி நிலத்திலே, நிகழ்கிறது. வேட்டைமேற் சென்ற தலைவன் தன் தோழரைப் பிரிந்து தனித்திருக்கும்

போது, மலர் கொய்வதற்காக அங்கு வந்து தன் தோழி யரைப் பிரிந்து தனித்திருக்கும் மங்கையொருத்தியைக் கண்டு அளவளாவிக் கூடுகிறான். பின்னர் அவளைப் பிரிந்து தன் பரிவாரத்தை யழைத்துக்கொண்டு தன்னூர் திரும்பு கிறான். அவளும் தன் தோழியரோடு வீடு திரும்புகிறாள்; ஆனால், பிரிந்துசென்ற காதலனையே எண்ணி ஏங்குகிறாள். இவள் நிலையைத் தாய் உணர்ந்து கவலையுற்றுப் பின் தலைவ னது சிறப்பை எண்ணித் தேறி, மகளையும் தேற்றுகிறாள். அச்சமயம், தலைவன் இம் மங்கையை மணம் பேசுவதற் காகத் தன் தூதரை யனுப்புகிறான். பெண்ணின் தாய் மகிழ்ந்து பெண்ணை வாழ்த்தித் தலைவன் இல்லத்துக்கு அனுப்பிவிடுகிறாள்.

இதுவே இங்கு நாம் ஆராய்ந்துவரும் காதற் பிரபந் தத்தி லமைந்த கதையின் சுருக்கம். காதல் என்ற அதன் பெயரே அதன் போக்கை ஓரளவு தெரிவிக்கிறது. ஆயினும், பிரபந்த இலக்கணங் கூறும் பாட்டியல் எதுவும் இப்பிரபந்தத்தை விளக்கிச் சொல்லவில்லை. 'பவனிக் காதல்' என்ற ஒரு பிரபந்தமானது நவநீதப் பாட்டியலின் செய்யுள்* ஒன்றில் கூறப்பட்டுள்ளது:

செயல்மீறச்
சீரைப் பிறர்க்குரைத் தாற்பவ னிக்காதல் தேமொழியே.

கி. பி. 1732-ல் எழுதப்பெற்ற சதுரகராதியானது இதையே இன்னும் தெளிவாகக் கூறுகிறது: "பவனிக் காதலாவது, உலாக் காட்சியாலெய்திய காம மிகுதியால் அவை பிறரொடும் உரைத்து வருந்துவது." அதாவது, தலைவன் உலா வந்ததைக் கண்ட பெண் அவன்மீது காதல் கொண்டு தன் காதல் மிகுதியைப் பிறருக்குச் சொல்லி ஏங்குவதே பவனிக் காதல் என்ற பிரபந்தத்துள் அடங்கிய

* ராவ்சாகிப் வையாபுரிப் பிள்ளையவர்கள் பதிப்பு, மிகைச்செய்யுள் 11.

பொருளாகும். இத்தகைய பிரபந்தம் எதுவும் இப்போது தனியே வழங்குவதாகத் தெரியவில்லை. அன்றியும், மேற் சொன்ன காதற் பிரபந்தத்துக்கு இப்பவனிக் காதலின் இலக்கணம் சிறிதும் பொருந்தாது; இதன் போக்கு வேறு, அதன் போக்கு வேறு.

இக்காதற் பிரபந்தத்தின் இலக்கணத்தை வேறெந்த நூலும் சொல்லவில்லை. ஆயினும், இப்புதிய பிரபந்த வகையானது எப்படியோ தோன்றிச் சிறிது காலம் நாடெங்கும் பரவி வளர்ந்து வரலாயிற்று. புலவர்கள் 17-ம் நூற்றூண்டின் இறுதியிலும் 18-ம் நூற்றூண்டின் தொடக்கத்திலும் இப்பிரபந்தம் செய்வதில் ஈடுபட்டார்கள்.

அக்கால நிலை

இக் காதற்பிரபந்தத்தைப் படிக்கும்போது, அதன் கதைப் போக்கில் களவொழுக்கத்தைச் சிறப்பித்துக் கூறியிருப்பதை மட்டுமின்றி, அதில் அடங்கியுள்ள வருணனைகளில் அருவருக்கத் தக்க அளவுக்குச் சிருங்காரச் சுவையே மலிந்திருப்பதையும் காண்கிறோம். இப்பிரபந்தம் எழுந்த காலத்தில் தமிழ்நாடு இருந்த நிலையை ஆராய்ந்து பார்த்தால், இதன் காரணத்தை உணர்வது எளிதாகும்.

முகம்மதியர் படையெடுப்பினாலும் பிற காரணங்களாலும், தமிழ்நாட்டின் பண்டைய முடிவேந்தர் மரபுகளான சோழ பாண்டிய மரபுகள் பல நூற்றூண்டுகட்கு முன்னமேயே அழிந்து போயின. முகம்மதியரை எதிர்த்து நின்று ஓரளவு வெற்றிபெற்ற விசயநகரத்தரசர்களின் புயவலி காரணமாக, தமிழ்நாட்டில் அவர்கள் ஆதிக்கம் ஓங்கலாயிற்று. அவ்வரசர்களின் பிரதிநிதிகளாகத் தென்னாட்டிலே மதுரையைத் தலைநகராகக் கொண்டு ஆண்ட நாயக்கத் தலைவர்கள், விசயநகரம் வலிகுன்றியவுடனே,

தாங்களே தனியரசு செலுத்தத் தொடங்கினார்கள். இவர்களுக்கு உதவியாயிருந்த படைத்தலைவர்கள் நாட்டில் அங்கங்கே பாளையக்காரர் என்ற பெயரோடு இருந்து, சிறிய படையையும் வைத்துக் கொண்டு, சிற்றரசர்போல ஆளத் தொடங்கி விட்டார்கள். இங்ஙனம் ஆளத் தொடங்கிய காலத்திலே, அயல் நாட்டினர் படையெடுப்பாலும் உள்நாட்டுக் குழப்பத்தாலும் முன்னமே நாட்டில் நடந்துவந்த கொள்ளை, கொலை முதலிய கொடுமைகளும், மக்கள் மனத்திலிருந்த அச்சமும் கவலையும் சற்று மறைந்தன. நாட்டில் சிறிதளவு அமைதி நிலவலாயிற்று. அவரவர் தொழில்கள் முறையாக நிகழலாயின.

சோழ பாண்டிய மன்னர்களால் ஆதரித்து வளர்க்கப் பெற்று வந்த பழம் பெரும்புலவர் மரபானது, அரச சபையின் ஆதரவு கிடையாமையால், இடைக்காலத்தில் அறவே மறைந்துபோய் விட்டது. அவரவர், தங்கள் தங்கள் சமயத்தைப் பாதுகாத்துக் கொண்டாலே போதுமென்று கருதிச் சமய நூல்கள் செய்வதிலும் சமய உணர்ச்சி குன்றாமல் வளர்ப்பதிலும் கருத்தைச் செலவிட்டார்கள். நாட்டிலிருந்த குழப்பத்தால், பெருங் காப்பியம் செய்ய வல்ல கவிஞர் தோன்ற இடமில்லாமற் போயிற்று. அங்கங்கே சிறுசிறு பிரபந்தம் பாடிய புலவர்களே வாழ்ந்து வந்தார்கள். இலக்கிய உலகம் இந்த நிலையிலே இருந்தபோதுதான் நாயக்கர் ஆட்சி நிலைத்து, மேற்கூறியவாறு சிறிதளவு அமைதி நிலவலாயிற்று. புலவர்களும் இந்த அமைதியைப் பயன்படுத்திக் கொள்ள முனைந்தார்கள். பழந் தமிழ் மன்னர் எவருமில்லை. ஆகவே, இவர்களுடைய புலமையைத் தக்கபடி அறிந்து போற்றுவாரு மில்லை. அங்கங்கே சிற்றரசர்களைப்போல வாழ்ந்த பாளையக்காரர்களையே இவர்கள் தேடிப்போக வேண்டியவர்களானார்கள். பாளையக்காரர்கள், பெரும்பாலும் நாயக்க பரம்பரையினர்.

அக்காலத்திலே இவர்களுக்குப் பழஞ்சிறப்பெதுவும் கிடையாது. தமிழ்க் கல்விப் பெருமையும் அறவே இல்லை. இவர்களைப் பாடிப் பரிசில் பெற்றுத்தான் அக்காலத்துப் புலவர்கள் வாழவேண்டியிருந்தது.

இப் பாளையக்காரர்கள் சிற்றின்பத்திலே பெரிதும் ஈடுபட்டவர்கள். ஆகவே, அப்புலவர்கள் தங்கள் புலமையை இவர்களிடம் காட்டிப் பரிசில்பெற முயல்வதைவிட, சிற்றின்பச் சுவைமலியப் பாடல்பாடி இவர்களைப் போற்றினால் இவர்களை எளிதில் மகிழ்விக்கலாம் என்று கண்டார்கள். இதன்பயனாக எழுந்த பாடல்வகைகளிலே 'காதல்' என்ற பிரபந்தவகையும் ஒன்றாகும். 'உடலோடு உலவுகின்ற மன்மதன்' என்று தலைவனைப் புகழ்ந்து அவனைக் கண்டு ஒரு பெண் காமுற்றாள் என்று பாடினால், அப் பாட்டிலே இந்தத் தலைவன் கவிச் சுவையைக் காணாவிட்டாலும் சிற்றின்பச் சுவையையாவது கண்டு அதில் ஈடுபட்டுத் தங்களுக்குப் பரிசில் அளிப்பான் என்பது புலவர்கள் எண்ணம்.

காதற் பிரபந்தங்கள்

இவ்வாறு எழுந்த காதற் பிரபந்த வகையிலே, முதன் முதலாகத் தோன்றியது, நிலக்கோட்டைப் பாளையக்காரனாயிருந்த நாகம கூளப்ப நாயக்கன்மீது சுப்பிரதீபக் கவிராயர் பாடிய காதலாகும். இதையடுத்துக் கணக்கற்ற பிரபந்தங்கள் எழுந்தன. கொங்குநாட்டைச் சேர்ந்த பழையகோட்டை நல்லதம்பிச் சர்க்கரை மன்றாடியார் மீது வீரபத்திரக் கவிராயர் பாடிய காதல் *

* இந்நூலைப் பாடிய ஆசிரியர் 17-ஆம் நூற்றாண்டிலிருந்த அமுத கவிராயருக்கு உடன்காலத்தவரென்றும், பாட்டுடைத் தலைவனான மன்றாடி, திருமலை நாயக்கனுடைய (1623-59) தளகர்த்தனான ராமப்பய்யன் காலத்தவனென்றும் வரலாறுகள் வழங்குகின்றன. இவை உண்மையாயின், இந்நூலே முதலிற் றோன்றிய காதற் பிரபந்தமாகலாம்.

மற்றொரு சிறந்த பிரபந்தம்; கவிச்சுவை நிரம்பியது; இவற்றை யொட்டிச் சமீப காலத்தில் பாடப்பெற்ற நூல், இராசவல்லிபுரத்தில் சிறந்த வள்ளலாயிருந்த முத்துசாமிப் பிள்ளைமீது அழகிய சொக்கநாதபிள்ளை சென்ற நூற்றாண்டின் பிற்பகுதியில் பாடிய காதலாகும். திருமலைக் கருப்பன் காதலும் (கி. பி. 1740) பழனிக் காதலும் (இது இன்னும் அச்சாகவில்லை) தெய்வங்களின்மேற் பாடப் பெற்றவையாகும்.

'கந்தர் காதல்' என்ற மற்றொரு நூல் (அச்சாகாதது), இக்காதற் பிரபந்தங்களினும் வேறான போக்குடையது. இதனுள், தலைவனைச் சோலையில் கண்டு காதல் கொண்ட பெண்ணே தன் வரலாற்றைக் கூறுகிறாள்: தான் தலைவனைக் கண்டதையும், அவன் தன் நலத்தைப் பாராட்டியதையும், தன்னைக் கூடியதையும், பின் தன்னைப் பிரிந்ததையும் தானே தன் தோழிக்குக் கூறுகிறாள்; தனது பிரிவாற்றாமையையும் அவளுக்குரைத்துத் தூது செல்லுமாறு அவளை வேண்டுகிறாள்; அவள் சென்று அருள் செய்யுமாறு கந்தனை வேண்ட, கந்தனும் இரங்கி அருள் செய்கிறான்; பிறகு தலைவி கந்தனோடு கூடிச் சுகித்திருக்கிறாள் என்று முடிகிறது இந்தக் காதல். பிரிந்துவந்த தலைவி தலைவனிடம் அன்னத்தைத் தூதுவிட்டாள் என்றொரு செய்தி மேற்கூறிய திருமலைக் காதலில் காணப்படுகிறது.

காதற் பிரபந்தம் தோன்றி வழங்கத் தொடங்கிய பிறகு, அந்நூலில் அமைந்துள்ள பாவினத்தையுடைய கண்ணிகளாலே எந்த நூல் செய்தாலும், அதற்குக் காதல் என்றே பெயர் கொடுப்பது வழக்கமாகி விட்டது. 1100 கண்ணிகளை யுடைய மனுநீதிகாதல் என்ற பிரபந்தத்தை இதற்கு உதாரணமாகச் சொல்லலாம். இதன் ஆசிரியர் ஆறை - தெய்வச்சிலையா பிள்ளை என்பவர். மனுநீதி

யனைத்தையும் தொகுத்துப் பலர், மாலையென்றும், சதக மென்றும், சாரமென்றும் பாடியது போலத் தாம் காதல் என்று பாடியதாக இவர் கூறுகிறார். இந்நூல், நீதிகளையும் உலக வழக்கையும் ஒன்றாய்த் தொகுத்துக் கூறுகிறதே யொழிய, மேற்சொன்ன காதற் பிரபந்தங்களுக்கும் இதற்கும் வேறு எவ்விதத் தொடர்பு மில்லை.

•

உ

கூளப்ப நாயக்கன் காதல்

காதற் பிரபந்தங்களின் வரிசையிலே மிகப் பழமை யானது இந்நூல்; தமிழ் நாட்டிலே, படித்தோரும் பாமர மக்களும் விரும்பிப் பயில்வது. மதுரை ஜில்லாவி லுள்ள பழைய பாளையப்பட்டுக்களுள் ஒன்றான நிலக் கோட்டையில் பாளையக்காரனு யிருந்த நாகம கூளப்ப நாயக்கன்மீது சுப்பிரதீபக் கவிராயர் என்ற புலவர் பாடியது.

நிலக்கோட்டை

விசய நகரத்தில் அரசாண்ட மன்னருடைய தள கர்த்தனாகத் தென்னாடு வந்து மதுரையைக் கைப்பற்றிய விசுவநாத நாயக்கன் கி. பி. 1559-ல் மதுரையில் தனி நாயக்க அரசை நிலைநாட்டினான். விசயநகரத் தொடர் பின்றி - அதாவது அந்நகர மன்னனுக்குக் கப்பம் கட்ட வேண்டிய நிர்ப்பந்தமின்றி - இந்த நாயக்கப் பரம்பரை யினர் மதுரையில் அரசாளத் தொடங்கினர். விசுவ நாத நாயக்கன், போரில் தனக்குத் துணைபுரிந்த படைத் தலைவர் 72 பேருக்கும் பாண்டிநாட்டிற் சிற்சில பகுதி களைப் பிரித்துக் கொடுத்தான். இவர்கள் *பாளையக் காரர் எனப் பெற்றார்கள்; இவர்களுக்குட்பட்ட நாடு

* பாளையக்காரர் என்போர் இக்காலத்திய சமீன்தார்களை ஒத்தவர்கள்.

ஒவ்வொன்றும் ஒரு பாளையப்பட்டு எனப் பெயர்பெற்றது. இவர்களிற் சிலர் முன்னமே பாண்டி நாட்டிலேயே இருந்தவர்கள். வேறு சிலர், வடநாட்டிலிருந்து விசுவ நாதனோடு உடன் வந்தவர்கள். இவர்கள் ஆண்டுதோறும் விசுவநாதன் சந்ததியினருக்கு ஒரு தொகையைக் கப் பங் கட்டிவரவேண்டியவர்கள். ஒரு சிறிய படையையும் இவர்கள் வைத்து வந்தார்கள்.

வடநாட்டிலிருந்து வந்த படைத்தலைவர் அனைவரும் நாயக்கர்; இவர்கள் தாங்கள் வழிபட்டுவந்த அகோ பிலத் திருமாலின் திருவுருவத்தைத் தமிழ்நாட்டிலும் பிரதிட்டை செய்வித்தார்கள்.

மேற்சொன்னவாறு ஏற்பட்ட பாளையப்பட்டுக்களில் ஒன்று, நிலக்கோட்டை. இது, பழைய திண்டுக்கல் பிரி வைச் சேர்ந்த 26 பாளையங்களில் ஒன்று. இதைத் தாபித்த நாயக்கன், மண்ணாலேயே தன் கோட்டையைக் கட்டிக் கொண்டமையால், ஊரின் பெயர் நிலக்கோட்டையாயிற் றும். இந்நூலிலுள்ள ஒரு குறிப்பும் இதைப் புலப்படுத்து கிறது; "உன்னுடைய கோட்டை மண்கோட்டை தானே? எங்கள் கோட்டை கற்கோட்டை; ஆகவே எங்களை நீ என்ன செய்ய முடியும்?" என்று பகைவர் சொல்ல, அதைக் கேட்டு நாயக்கன் கோபிக்கிறான்; கோபத்தினாலே சிவந்த இவன் கண்ணைப் பார்த்தவர்கள், "இது மண்கோட்டை யன்று, செம்பொற் கோட்டை" என்று புகழ்ந்து சொல்லும்படி யிருக்கிறதாம் இவ னுடைய நிலக்கோட்டை:

> கற்கோட்டை என்றவர்மேற்
> கண்சிவந்து, கண்டவர்செம்
> பொற்கோட்டை என்னப்
> புகழும்நிலக் கோட்டையினான். (23)

இவ்வூரிலுள்ள கோயில், அகோபில நரசிம்ம சுவாமி கோயில். இவனுடைய முன்னோர் வடநாட்டிலிருந்து வந்த நாயக்கரானமையால், தாங்கள் வடநாட்டில் வழி பட்டுவந்த அகோபிலத் திருமாலையே இங்கும் தாபித்தார் கள். இந்தத் திருமாலின் பெயரை இந்நூலுள் இரண்டி டங்களிற் காணலாம் :

ஆளும் பெருமாள் அகோபிலமால் மெய்யருள்எந்
நாளும் பெறும்பெரிய நாயகன். (3)

அகோபிலமால்
செந்திருவின் பாதமலர் சேவித்து. (280)

நிலக்கோட்டைக்கு அக்காலத்தில் பெஞ்சை (25) என்றும், நவபுரி (13,280) என்றும் பெயர் வழங்கிற்று. இன்று இவ்வூர், நிலக்கோட்டைத் தாலுக்காவின் தலைநகரா யிருக் கிறது.

கூளப்ப நாயக்கன்

17-ஆம் நூற்றாண்டின் இறுதியிலும், 18-ம் நூற்றாண் டின் தொடக்கத்திலும், நிலக்கோட்டைப் பாளையக் காரனா யிருந்தவன், கூளப்ப நாயக்கன். இவன் நாகம கூளப்பன் (164, 275) என்றும், பெரிய நாகேந்திரன் (காப்பு, 94, 104) என்றும், பெரிய நாயகன் (1, 3, 6, 73) என்றும் இந்நூலுள் கூறப்பெறுகிறான். மதுரை நாயக்க வமிசத்தை நிலைநாட்டிய விசுவநாதனுடைய தந்தை பெயர் நாகம நாயக்கனுதலால், கூளப்பன் பெயரோடு ஒட்டி வழங்கும் ' நாகம ' என்ற தொடரானது, இவன் அந்த நாகமன் வழியில் வந்தவன் அல்லது அவனுக்கு உறவினன் என்பதைக் குறிப்பிடுவதாகக் கருதலாம். அன்றியும்,

> சித்ரசரா சேந்த்ரன் திருமலை கண்டமன்னன்
> மைத்துனவே ளாக வரும்பெரிய நாகேந்த்ரன்

என்று இந்நூலுள் (33) வருங் குறிப்பால், இந்தக் கூளப்பன் மதுரையிலிருந்து அரசாண்ட திருமலை நாயக்க மன்னனுக்கு (கி. பி. 1623-59) மைத்துன முறையினன் என்பதும் ஏற்படுகிறது.

இவன்மீது பாடப்பெற்றுள்ள 'விறலி விடு தூது' இவன் காலத்தை இன்னும் தெளிவாக அறிய உதவுகிறது :

> திக்கெல்லாங் கொண்டாடுஞ் செங்கோல் விசயரங்க
> சொக்கநா தேந்த்ர துரைராசன் - சக்ரபதி
> சேதுபதி பாண்ட்யகுல தெட்சிணசிங் காசனந
> ராதிபதி மெச்சு நரபாலன் (34-35)

என்ற வரிகள், மதுரையிலிருந்து அரசாண்ட விசயரங்க சொக்கநாத நாயக்கனால் (1706-32) பெரிதும் போற்றப் பெற்றவன்* கூளப்பன் என்பதைத் தெரிவிக்கின்றன. இந்த விசயரங்கன், ராணி மங்கம்மாளின் பேரன்; அவளுக்குப் பிறகு பட்டத்துக்கு வந்தவன். இவன் ஆட்சியிலே, 1719-ஆம் ஆண்டில் (விகாரி வருடம் தை மாதம் 13-ஆந்தேதி புதன்கிழமை) எழுந்த சாசனமொன்றில், வத்தலகுண்டிலிருந்த கோயில் உற்சவத்துக்காக அவ்வூர் வணிகர்கள் எண்மர் ஆண்டுதோறும் பணம்கொடுத்து உதவுவதாக ஏற்பாடு செய்தார்கள். விசயரங்கனுடைய

---

* 1623-59-ல் அரசுபுரிந்த திருமலை நாயக்கனுக்கு மைத்துனனாயிருந்த கூளப்பன், ஐம்பது அல்லது அறுபது ஆண்டுகள் சென்று விசயரங்க சொக்கநாதன் காலத்திலும் இருந்திருத்தல் கூடுமா என்ற ஐயம் எழலாம். அக்காலத்தில் முதிய மன்னரும் இளம் பெண்களைக் கலியாணம் செய்யும் வழக்கம் சாதாரணமா யிருந்துவந்தது. திருமலை நாயக்கனுக்கு மனைவியர் அறுவர் என்று மதுரைக் கோயிலிலுள்ள அவன் சிலைவடிவத்திலிருந்து நாம் அறிகிறோம். அவன் இறந்த காலத்தில், அதாவது 1659-ல், அவனுடைய கடைசி மனைவி இளம்பெண்ணா யிருந்திருக்கலாம்; கூளப்பன் இவளுடைய தம்பியாகவும், சிறுபிள்ளையாகவும் இருந்திருக்கலாம். அப்படியானால், விசயரங்க சொக்கநாதன் ஆட்சித் தொடக்கத்திலே இவன் ஏறக்குறைய அறுபது வயதுடையவனாக இருந்திருத்தல் கூடும்.

அரண்மனை அதிகாரியாயிருந்த கூளப்ப நாயக்கன் முதலியோருடைய சம்மதத்தின்பேரில் இவ்வேற்பாடு நிறைவேறியதாக அச்சாசனம் கூறுகிறது. எனவே, திருமலை நாயக்கன் ஆட்சியிலே இவன் உத்தேசம் பத்து ஆண்டுகள் வாழ்ந்தானென்றும், இச்சாசனத்தின் பின் பத்து ஆண்டுகள் வாழ்ந்தானென்றும் கொண்டால், இந்நாயக்கன் காலம் ஏறக்குறைய 1650-1730 என்பது தெரிகிறது.

கூளப்பனுக்கு நிகளங்கமல்லன் என்றும் பெயர் வழங்கிற்று (காதல். 273, 283). இவன், சிந்தம கூளேந்திரன் என்ற நாயக்கனுடைய புதல்வன் (24, 101). குமாரதுரைச் சிந்தமன் என்பவன் இவனுக்குத் தம்பி (விறலி. 1047, 1057); தம்பியொருவன் இருந்தமையினாலே இவருக்குப் பெரிய நாயகன் என்றும் பெரிய நாகேந்திரன் என்றும் பெயர் வந்திருக்கலாம்.

நாயக்கன், ஒன்பதூர் வேந்தன் என்று இந்நூலுள் (358) சொல்லப் பெறுகிறான். நாயக்கர் மரபிலே, 'வல்லக்கா வார்குலம்' என்ற பிரிவைச் சேர்ந்தவன் (25). இவனுடைய கொடி, பக்கரை* யடையாளமுடையது:

> **காந்து கலியைவெட்டுங் கண்டகோ டாரியைப்போல்**
> **ஏந்துவெள்ளைப் பக்கறைஇ டாலினான்.** (விறலி. 49)

இவனுடைய யானையின் பெயர் சருவசித்தி வாரணம் (காதல். 294). பட்டரையங்கார் என்பவர் இவனுடைய குரு (விறலி. 52). இவன் தமிழ்வாணருக்குக் கொடை வழங்கிய சிறப்பை,

> **ஐந்தருவும் ஐந்துவிர லாகித் தருவளனச்**
> **செந்தமிழ்க்கு நல்குமலர்ச் செங்கையான்** (விறலி. 55)

என்று ஆசிரியர் புகழ்கிறார்.

---

* பக்கரை - குதிரை அங்கவடி.

இவனுடைய காலத்துக்குப் பிறகு, நிலக்கோட்டை நாயக்கர் கையைவிட்டு மாறி ஆங்கிலேயர் வசமாயிற்று. பின்வந்த நாயக்கர் சரியாகக் கப்பங்கட்டாமையினலே, 1812-ல் ஆங்கிலேயர் நிலக்கோட்டைப் பாளையப்பட்டை வசப்படுத்திக்கொண்டு, அப்போதிருந்த நாயக்கனை நீக்கி விட்டு அவனுக்கு மாதந்தோறும் உபகாரச் சம்பளம் கொடுத்து வந்தார்கள்.

சுப்பிரதீபக் கவிராயர்

இந்நூலாசிரியர் சுப்பிரதீபக் கவிராயர் என்பவர்; இந்நூலுள் தலைவனுடைய கட்டியத்தைக் கூறுமிடத்தில் 'சுப்ரதீபகர்த்த நாவலர்க்கு உதார' (285-ம் கண்ணி) என்று தம் பெயரையே குறிப்பிடுகிறார்.

இவர் மதுரையைச் சார்ந்த திருமங்கலந் தாலுக்காவிலே கம்மாளர் (தட்டார்) மரபிலே பிறந்தவர். சிறந்த புலமையும் கவித்திறமும் பெற்றவர். மதுரையிலிருந்த பரஞ்சோதி முனிவரிடம் கல்வி பயின்றவர். இந்நூலுள் அவருக்குக் குருவணக்கங் கூறுகிறார்* :

கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன். (5)

அவரிடம் இவருக்குள்ள ஈடுபாட்டையும் பக்தியையும் இவ்வரிகள் காட்டுகின்றன.

அக்காலத்தில் சிறந்த கவிஞரா யிருந்த பலபட்டடைச் சொக்கநாத பிள்ளைக்கும் இவருக்கும் மனவேற்றுமை இருந்ததென்று ஒரு வரலாறுண்டு. சொக்கநாத

* மதுரைத் திருவிளையாடற் புராணம் பாடிய பரஞ்சோதி முனிவருடைய காலத்தைத் திட்டமாய் அறிவதற்கு இவ்வரிகளிலுள்ள குறிப்பு அரிய உதவியா யிருக்கிறது.

பிள்ளை, சண்பகநல்லூர்ச் சிவபெருமான்மீது வண்டு விடு தூது என்ற பிரபந்தம் பாடி அரங்கேற்றிய காலத்தில், சண்பக மலரில் வண்டு படியாதென்ற நியதியைக் கொண்டு, சுப்பிரதீபக் கவிராயர் அந்நூலிலே குற்றங் கூறினர். அப்போது சொக்கநாத பிள்ளை, நாமகளைத் தியானித்து, அவளருளால் அங்கிருந்த ஒரு சண்பக மரத்தி லுள்ள மலரில் வண்டுகள் வந்து படியச் செய்தாராம்.

கவிராயரை ஆதரித்த வள்ளல், நிலக்கோட்டையில் பாளையக்காரனு யிருந்த நாகம கூளப்ப நாயக்கன். இவன் மீது அவர் இந்தக் காதற் பிரபந்தத்தையும் 'விறலி விடு தூது' என்ற மற்றொரு பிரபந்தத்தையும் பாடினர். காதல், 374 கண்ணிகளை யுடையது; விறலி விடுதூது 1100 கண்ணிகளை யுடையது. இவையன்றி, இவர் நாயக் கன் மீது பல தனிப் பாடல்களும் பாடினரென்று தெரி கிறது (பக்கம் 77).

திரிசிராப்பள்ளி ஜில்லாவிலுள்ள அரியிலூரில் அக் காலத்தில் சமீன்தாரனும் மழவர்குலத் தலைவனும் குன்னரங்கன் என்பவன் இருந்தான்; இவன் மழவரங் கன் என்பவனுடைய புதல்வன். கவிராயர் இவனாலும் சிலகாலம் ஆதரிக்கப் பெற்று வாழ்ந்தார். சிறிது காலத் துக்குப் பின், குன்னரங்கனுக்கும் அவன் புதல்வன் ஒப் பிலா மழவராயனுக்கும் பகைமை ஏற்பட்டதென்றும், கவிராயர் குன்னரங்கனைப் பிரிந்து மழவராயனால் அபி மானிக்கப்பெற்று வாழ்ந்தா ரென்றும், குன்னரங்கன்மீது இவர் பாடிய பாடல்களால் தெரியவருகிறது (பக்கம் 79).

நாயக்கன் காலத்துக்குப் பிறகு இவர் வறுமையுற்று வருந்தினர். அக்காலத்தில் இத்தாலி நாட்டிலிருந்து கிறிஸ்துமதப் பிரசாரம் செய்வதற்காகப் பெஸ்கி

என்ற துறவி தமிழ் நாட்டில் வந்து தங்கினர். தமிழிலே பிரசாரம் செய்தால்தான் தமது மதப்பிரசாரம் பலிக்குமென்று கண்டு, அவர் தமிழைக் கற்றுத் தமிழிலே பிரசாரம் செய்யத் தலைப்பட்டார். கவிராயருடைய புலமையைப் பலர் வாயிலாகக் கேள்வியுற்ற பெஸ்கி அவரைத் தம் தமிழாசிரியராகக் கொண்டார். இவர் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலம் ஏறக்குறைய 1710-1747. இக் காலத்தில் கவிராயர் இவருக்குத் தமிழ் கற்பித்தது மட்டுமின்றி, இவருக்குப் பல தமிழ் நூல்கள் இயற்றித் தந்து, இவர் தமிழ் நூல்கள் பல இயற்றவும் துணை புரிந்தார். சதுரகராதி முதலிய நூல்கள் இவருதவியால் வெளியாயின.

கவிராயர் நெடுங்காலம் வாழ்ந்தார் என்றும், முதுமையிலே கண்ணொளியை இழந்துவிட்டா ரென்றும் சொல்வதுண்டு. இவருக்கும் பலபட்டடைச் சொக்கநாத பிள்ளைக்கும் பகைமை யிருந்த போதிலும், கவிராயர் இறந்தபோது சொக்கநாத பிள்ளை பெரிதும் மனம் வருந்தி,

செய்ய கொழுநைச் சிவசுப் பிரதீபா !
வெய்ய கொழுந்தழலில் வேவதே - ஐயகோ !
'நின்மலனர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத
மன்மதன்காண்' என்றுசொன்ன வாய்

என்று பாடினராம். 'நின்மலனர் வெண்ணீற்று நெற்றிக்கண் காணுத - மன்மதன்காண்' என்ற தொடர், கவிராயர் பாடிய விறலிவிடு தூதில் (63-ம் கண்ணி) வருகிறது ; கவிராயர் பாட்டிலே சொக்கநாத பிள்ளைக் கிருந்த ஈடுபாட்டை இது புலப்படுத்துகிறது.

நூல்செய்த காலம்

கூளப்ப நாயக்கன் விசயரங்க சொக்கநாதனல் (1706 - 1732) அபிமானிக்கப் பெற்றிருந்த காலத்திலேயே இந்

நூல் பாடப் பெற்றதென்று தெரிவதால் (விறலி. 34 - 35), ஏறக்குறைய 1710-ல் இந்நூல் செய்யப் பெற்றிருத்தல் கூடும்.

நூல் நயம்

இந்தக் காதற் பிரபந்தமானது மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டது என்று இங்கே சொல்வது மிகை யாகும். பின் வந்த புலவர் பலர் இதைப் பின்பற்றிப் பிரபந்தம் பாடினார்கள் என்பதே இதன் சிறப்பைக் காட்டு கிறது. எளிய நடையிலே அழகிய முறையிலே கவிச் சுவை ததும்பக் கவிராயர் இப்பிரபந்தத்தைச் செய்திருக் கிறார். பெரும்பான்மையான அடிகளில் உண்மையான பாவத்தையும் நுட்பமான கவித் திறத்தையும் உணர முடிகிறது. எடுத்துக் காட்டாகச் சில வரிகளைக் கீழே காணலாம்.

தசாங்கங் கூறும்போது, தலைவனுடைய யானையைச் சொல்லுகிறார். பகைவரை அது எப்படித் தகர்த்துக் காலி லிட்டு அரைத்துவிடும் என்பதைப் பாட்டின் சந்தமே காட்ட வல்லதா யிருக்கிறது :

சண்டையிற்பொ ருங்கொடித்த
லந்தகர்த்து வஞ்சரைக்கைக்
கொண்டெடுத்த றைந்துரப்பு
கும்பவுக்ர குஞ்சரத்தான்.

தலைவனுடைய முரசு அதிருகிறது. அதன் ஒலி யையே நாம் கேட்கிறோம் :

உடைதிரைகள் குமுறுகடல்
ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய
அதிருமொலி மணிமுரசான்.

தலைவனுடைய வாய்மையையும் கொடைத் திறத்தையும் எவ்வளவோ நயம்படவும் அழகாகவும் ஆசிரியர் இரண்டு கண்ணிகளிலே சொல்லிவிடுகிறார் :

மாமறைநூல் பொய்த்தாலும்
    வாரிதிநீர் பொய்த்தாலும்
சோமரவி பொய்த்தாலும்
    சொன்னமொழி பொய்யாதான்.

அண்டர்தரு வுக்கும்
    அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும்
    கொடைபயிற்று செங்கரத்தான்.

இதைவிடச் சொல்வதற்கு வேறென்ன இருக்கிறது ?

தோழிகள் நவரத்னமாலைக்கு அலங்காரம் செய்கிறார்கள். என்னென்னவோ அணிகளை யெல்லாம் அணிவிக்கிறார்கள். மை யெழுதினார்கள், பொட்டெழுதினார்கள், சாந்தும் குங்குமமும் கதம்பமும் பூசினார்கள். அவளோ, பொற்சிலைபோலிருக்கிறாள். பொற்சிலைக்கு எப்படித்தான் அழகுசெய்ய முடியும்? என்ன அழகு செய்தாலும் அதற்கியல்பாயுள்ள அழகு எவ்வளவோ மேலானதாகத்தானே இருக்கும்? எல்லாவற்றையும் அணிவித்த பிறகு, தோழிகள் அவளைச் சுற்றிச் சுற்றி வந்து பார்க்கிறார்கள். அருகில் ஒரே இடத்திலிருந்து அழகைப் பார்ப்பதைவிட, தூரத்தில் நின்றுகொண்டு, வெவ்வேறு பக்கத்திலிருந்து பார்த்தால், அந்த அழகை இன்னும் நன்றாய் அனுபவிக்க முடியுமல்லவா ? இவ்விதம் அவர்கள் அலங்காரம் செய்வதையும், அலங்காரம் செய்யமுடியாமல் திகைப்பதையும், தாங்களே அவளழகைப் பார்த்து மகிழ்ந்து நிற்பதையும் கவிராயர் இரண்டு வரியில் எளிதாகச் சொல்லிவிட்டார் :

பூட்டினார் பொற்சிலைக்குப்
　　பொன்னிடுவார் போல்உடைமை,
சூட்டினார் பூமாலை,
　　சுற்றினார் தோழியர்கள்.

இவ்வளவு அருமையும் நயமும் பொருந்திய பாடல்களை யுடைய இந்த நூல் தமிழ் மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண்டதில் வியப்புக்கு இடமுண்டா ?

மு. அருணாசலம்

கூளப்ப நாயக்கன் காதல்

காப்பு

வெண்பா

பேராரும் பெஞ்சைப் பெரியநா கேந்திரன்மேற்
சீராருங் காதலையான் செப்பவே — நேராரும்
அக்கனித ரச்சோலிமுன் அப்பனைவ லத்தில்வரும்
கைக்கயமு கக்கடவுள் காப்பு.

நூல்

கடவுள் வாழ்த்து

பொன்மாது மேவுதிம்ம ராயர்அருள் பூண்டிருக்கும்
நன்மா நிதிபெரிய நாயகன்மேற் காதல்சொல,

வந்துதவு சொல்மதுர வாக்குதவி எப்பொருளுந்
தந்துதவ வேண்டுமெங்கள் தந்தி முகத்தோனே. உ

காப்பு. பேராரும் - புகழ் பொருந்திய. பெஞ்சை - கூளப்ப நாயக்கன் தலைநகரான நிலக்கோட்டை; நவபுரி என்றும் கூறப் பெறும். நாகேந்திரன் - நாகம கூளப்ப நாயக்கன். காதலை - காதற்பிரபந்தத்தை. அக்கனி - அந்த மாங்கனி. அப்பனை - சிவ பெருமானை. கயமுகக் கடவுள் - விநாயகர்; கயம் - யானை. விநாய கர் மாங்கனி பெறவேண்டிச் சிவபெருமானை வலம் வந்த வர லாற்றை இது சுட்டுகிறது.

1-2. விநாயகர் வணக்கம்: தந்தி முகத்தோனே, காதல் சொல உதவவேண்டும் என்க. பொன் மாது மேவு - இலக்குமி பொருந்திய. திம்மராயர் - திருமாலின் திருநாமம்; 'சங்கேந்தும் - திம்மரா யப்பெருமாள் செஞ்சரண சேகரனை' என்பது இவ் வாசிரியர் இத்தலைவன்மீது பாடிய விறலிவிடுதூது (23-24). பெரிய நாயகன் - கூளப்பன்; இவனுக்குத் தம்பி ஒருவன் இருந்தமையால் இவன் பெரிய நாயகன் எனப் பெற்றான். தந்தி முகத்தோன் - விநாயகன்.

ஆளும் பெருமாள் அகோபிலமால் மெய்யருள்எந்
நாளும் பெறும்பெரிய நாயகன்மேற் காதல்சொல, ௫

ஏடும் மணிவடமும் ஏந்துஞ் சரஸ்வதியே
ஆடுமயில் ஏறிவரும் ஐயனே முன்நடவாய்.

குரு வணக்கம்

கோமுனிவர் கொண்டாடும் கூடற் பரஞ்சோதி
மாமுனிவர் செம்பொன் மலர்ப்பாதம் நான்மறவேன்.

அவை யடக்கம்

நாட்டு புகழ்பெரிய நாயகன்மேற் காதலைநான்
சூட்டுகவி நாவலர்முன்சொல்லத் துணிந்ததுதான்,

தானந் தவயோக தத்துவமில் லானொருவன்
ஞானந் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும். ௭

3-4. அகோபில மாலின் மெய்அருளை எந்நாளும் பெறு கின்ற நாயகன்மேற் காதல் சொல, சரஸ்வதியே முன்நடவாய், ஐயனே முன் நடவாய் என்க. அகோபில மால்: தலைவனுடைய ஊரான நிலக்கோட்டையில் கோயில் கொண்டெழுந்தருளியுள்ள திருமால் (அகோபில நரசிம்ம சுவாமி). சரஸ்வதிதேவி கையில் புத்தகமும் படிகமாலையும் ஏந்தி யிருக்கிருள் என்பது மரபு. 'புத்த கம் படிகமாலை...தரித்த செங்கை விமலை' - பழம்பாடல். மயில் ஏறி வரும் ஐயன் - முருகன்.

5. கோமுனிவர் - முனிவருள் தலைவராயுள்ளோர். கூடற் பரஞ்சோதி மாமுனிவர் - மதுரைப் பரஞ்சோதி முனிவர்; இவர் திருவிளையாடற் புராணம் பாடியருளியவர்.

6-7. காதலை நான் சொல்லத் துணிந்தது, தத்துவம் இல் லான் தெளிந்தவர்க்கு நல்லறிவு சொல்வதொக்கும்.

தெள்ளமுதம் ஊட்டிஉரை திருத்தி வளர்த்தெடுத்தோர்
கிள்ளை குழறுமொழி கேட்டு மகிழ்வதுபோல், ௮
நன்னயவில் வேள்பெரிய நாகேந்த்ரன் என்கவியில்
என்னவழுக்கண்டாலும் இன்பமெனக் கொண்டருள்வான்.

தசாங்கம் - மலை

தேனளந்த கானவர்க்குத் தேவ ரமுதளக்க
வானளந்து நிற்கும் வராக கிரிவேந்தன் ;

ஆறு

கன்னி யமுனையொடு கங்கை கலந்ததுபோற்
பொன்னி கலந்த புனற்குடப மாநதியான் ;

நாடு

வண்ணக் குவிமுலையார் மஞ்சள்நீ ராறோடிப்
பண்ணைப் பயிர் வளர்க்கும் பாண்டி வளநாடன் ; ௧௨

8-9. வளர்த்தெடுத்தோர் கிள்ளை குழறுமொழி கேட்டு மகிழ்வது போல், நாகேந்திரன் என் கவியில் வழுக்கண்டாலும் இன்பமெனக் கொண்டருள்வான். கிள்ளை - கிளி. வழு - குற்றம்.

10. காதற் பிரபந்தத்திலே, தலைவனுக்குரிய தசாங்கம் சொல்வது மரபு. கானவர் - வேடர். அவர்களுக்கு அமுதமே தருவதற்காக அம்மலையானது வானளாவி நிற்கிறதாம். வராககிரி - பன்றிமலை. முனிவர் சாபத்தினாலே ஒரு வித்தியாதரன் பன்றியாகி உழன்று, பாண்டியனாலே வேட்டையாடிக் கொல்லப்பெற்றபோது, அவனுயிர் விண்ணுலகடைய, உடல் பன்றிமலை யாயிற்று என்பது திருவிளையாடற் புராணத்திற் கண்ட வரலாறு.

11. புனல் - நீரையுடைய. குடபமாநதி - மதுரைஜில்லாவை யொட்டி ஓடும் குடவனாறு என்ற ஆறு; 'ஆரமணியாரம் ... வாரியிடும் குடவ மாநதியான்' - விறலி. 37.

12. பெண்கள் குளிக்கின்ற மஞ்சள் குங்குமம் முதலியவை கலந்த நீர் ஆறாக ஓடிப் பயிரை வளர்க்கின்றது. அவ்வளவு செல்வம் மிகுந்த நாடு.

ஊர்

வட்ட மதிக்களங்கம் மாறத் தடவுதல்போல்
இட்டகொடி யாடும் இயல்சூழ் நவபுரியான்; கந

மாலை

கொத்தார் கருங்குழலார் குத்துமுலை பாயமணி
முத்தாரம் பின்னலிடு முல்லைத் தொடைமார்பன்;

பரி

ஓகைதந்து போர்க்களத்தில் உட்புகுந்து தாள்முடுகி
வாகைதந்து மீண்டுவரும் வாகுநட னப்பரியான்;

யானை

சண்டையிற்பொ ருங்கொடித்த லந்தகர்த்து வஞ்சரைக்கைக்
கொண்டெடுத்த றைந்துரப்பு கும்பஉக்ர குஞ்சரத்தான்;

குடை

விண்பிறையை வெல்லநில மீதின் முளைத்தெழுந்த
தண்பிறைபோல் ஓங்கும் தவளக் குடையுடையான்; கஎ

---

13. ஊரிற் பறக்கவிட்ட கொடிகள் வானளாவியிருப்பது, மதியின் களங்கத்தைத் துடைக்க முயல்வது போலிருக்கிறது.

14. கொத்து - பூங்கொத்து. முத்தாரம் - முத்துமாலை. முல்லைத் தொடை மார்பன் - முல்லை மாலை யணிந்தவன்.

15. ஓகை தந்து - உவகையோடு. தாள் முடுகி - விரைந்து அடியெடுத்து வைத்து. வாகை - வெற்றி. வாகு - அழகு. பரி - குதிரை.

16. பொரும் - போரிடுகின்ற. கொடித்தலம் - கொடியைத் தாங்கியுள்ள படைப் பகுதி. அறைந்து - நிலத்திலே மோதி. உரப்பு - பேரொலி செய்கின்ற. கும்பம் - யானை மத்தகம். குஞ்சரம் - யானை.

17. விண் பிறை - வானத்திலுள்ள சந்திரன். தவளக் குடை - வெண்கொற்றக் குடை.

முரசு

உடைதிரைகள் குமுறுகடல் ஒலியுமுகில் இடியுமென
அடையலர்கள் செவிகுடைய அதிருமொலி மணிமுரசான்;

ஆணை

அஞ்சினர் வாக்கிலிருந் தம்புபோல் ஓடிமட்டு
மிஞ்சினர் மார்புருவி வீம்படக்கும் ஆணையினன்.

பிற சிறப்புக்கள்

வட்ட நிலம்புரக்கும் மாரன் குமாரவர்க்க
பட்டமெனக் கட்டிவைத்த பட்டாபி டேகபரன்;
மிக்கஅருட் சொக்கேசர் மீனட்சி தம்மருளால்
திக்கு விசயஞ் செலுத்துகின்ற செங்கோலான்;
சீற்றமுட னேதான் சிவிகைதனில் ஏறுமுன்னே
வேற்றரசர் பின்னிடப்போர் வென்றுவரும் சேனையினன்;
கற்கோட்டை என்றவர்மேற் கண்சிவந்து கண்டவர்செம்
பொற்கோட்டை என்னப் புகழும்நிலக் கோட்டையினன்;

---

18. திரை - அலை. கடல் ஒலியும் முகில் இடியும் ஒத்து அதிரும் முரசு. முகில் - மேகம். அடையலர் - பகைவர். முரசின் ஒலியைப் பாட்டின் சந்தத்திலேயே கேட்க முடிகிறது.

19. மட்டு மிஞ்சினர் - சிற்றரசர் என்ற நிலையை மீறிக் கலகஞ் செய்தோர். வீம்பு - வலிமை.

20. பட்டாபிடேகம் செய்துகொண்ட சிறப்புடையவன்.

22. போருக்கு அவன் புறப்படுகிருன் என்றால், அதற்குள்ளாகவே அவன் சேனை போய் வெற்றிபெற்று வந்துவிடுமாம்.

23. அவனுடைய நிலக்கோட்டை மண்கோட்டையானாலும், வேறு கற்கோட்டையினுள் இருக்கும் பகையரசர் அவனுடைய சிவந்த கண்ணைக்கண்டபோது அஞ்சி, 'இது செம்பொற்கோட்டை' என்னத்தக்கது.

சிந்தமகூ ளேந்த்ர செகராசன் கண்மணிபோல்
வந்ததுரை சிங்கமெங்கள் மால்பெரிய நாகேந்த்ரன் ; உச

வாணிபுகழ் வல்லக்கா வார்குலத்தைக் கொண்டுவந்த
தோணியெனும் பெஞ்சைத் துரைப்பெரிய நாகேந்த்ரன் ;

பொன்னிலங்க வச்ரப் பொடியிலங்கப் பொற்கதவு
முன்னிலங்கப் பின்னிலங்க முத்திலங்கும் வாசலினன் ;

ஒட்டகட மானத் தொலிமுழங்கப் பேரிகைதம்
பட்டம் முழங்கப் பரிமுழங்கும் வாசலினன் ;

கட்டிவருஞ் சிங்களத்தார் கப்பம்வரக் காரானைக்
குட்டிவரச் சீனர்திறை கொண்டுவரும் வாசலினன் ;

ஆடை வழங்க அனம்வழங்க யாசகர்க்கு
மாடை வழங்க மனுவழங்கும் வாசலினன் ; உகூ

---

24. சிந்தமகூளேந்திரன், நாகம கூளப்பனுடைய தந்தை. 'சிந்தம குமார செயதரனே' - விறலி. 26.

25. செகராசன் - சக்கரவர்த்தி. வல்லக்கா வார் குலம் - கூளப்பன் குலம் ; 'வல்லக்கா வார்குலத்தில் வாள்வேந்தர் கண் குளிரப் - பல்லக்கு மேலுலவும் பாக்கியவான்' - விறலி. 64.

26. தலைவன் அரண்மனை வாயிற்கதவின் சிறப்பு. கதவிலே பொன்னும் வயிரமும் முத்தும் வைத்திழைக்கப் பெற்றுள்ளன.

27. டமானம் - டமாரம் ; 'குதிரைமேல் டம்மானங் கூட முழங்கிவர' - ராமப்பய்யன் அம்மானை. பரி - குதிரை.

28. சிங்களத்தாரும் சீனரும் திறைகொண்டு வருகிறார்கள். கரிய ஆனைக்குட்டிகளும் வாயிலிலே நடமாடுகின்றன.

29. அனம் - அன்னம். மாடை - பொன். மனு - மனுநெறி முறைமை.

சேலாடுங் கூர்விழியார் சென்ருடக் கைவசந்தன்
கோலாடப் பங்கயப்பெண் கூத்தாடும் வாசலினுன்; ௩0

மாமறைநூல் பொய்த்தாலும் வாரிதிநீர் பொய்த்தாலும்
சோமரவிபொய்த்தாலும் சொன்னமொழி பொய்யாதான்;

அண்டர்தரு வுக்கும் அருங்காம தேனுவுக்கும்
கொண்டல் தனக்கும் கொடைபயிற்று செங்கரத்தான்;

சித்தசரா சேந்த்ரன் திருமலே கண்டமன்னன்
மைத்துனவே ளாக வரும்பெரிய நாகேந்த்ரன்.

கொலு விருத்தல்

நீளும் பெருவாழ்வும் நீதிகளும் மேலோங்க
ஆளும் புவிபுரக்கும் அந்நாளி லேயொருநாள், ௩௪

---

30. சேலாடும் கூர்விழியார் - மீன்போன்ற, கூரிய விழி பெற்ற பெண்கள். ஆட - நடனமாட. வசந்தன் - மன்மதன். கோல் - செங்கோல்; வசந்தன் கைச் செங்கோல் ஆடுவதாவது, உலகிலே காதல் வாழ்க்கை நிலேபெறுவது. பங்கயப் பெண்-இலக்குமி. அவள் கூத்தாடுவது, செல்வப்பெருமையைக் காட்டும்.

31. மறைநூல் - வேதம். வாரிதி - கடல்; கடல்நீர் வற்றி விட்டாலும். சோம ரவி- சந்திர சூரியர்; இவர் ஒளி தராமற்போய் விட்டாலும்.

32. நினைத்ததைத் தரவல்ல கற்பக விருட்சமும் காம தேனுவும். கொண்டல் - மேகம். பயிற்று - கற்பிக்கிற. இவன் கை வழங்கும் கொடையைக் கண்டே கற்பகமும் காமதேனுவும் மேகமும் கொடையைக் கற்றன.

33. சித்தசன் - மன்மதன்; அவனே ஒத்தவன். திருமலே கண்ட மன்னன் - மதுரை நாயக்க மன்னரான திருமலே நாயக்கர் (கி. பி. 1623 - 1659). மைத்துன வேளாக - மைத்துன முறையாக.

34. புவி புரக்கும் - உலகை ஆளும்.

ஆரணஞ்சேர் வையை அருந்தீர்த்தந் தாஞடி
நாரணனைத் தாள்போற்றி நாமதீர்த் தம்பருகி, ௩ரு

மிக்ககன காரியப்பேர் வித்வச னங்கள்துரை
மக்களுடன் இன்பரச வர்க்க அமுதருந்திச்

சந்தனங்கத் தூரி சவாதுகதம் பம்பூசிச்
சுந்தரஞ்சேர் முத்துத் துராயிலங்கப் பாகைகட்டி,

மாணிக்கம் பச்சை வயிரவயி டூரியத்தால்
ஆணிப்பொன் ஞற்சமைத்த ஆபரண முந்தரித்து,

சங்கீதம் பாடச் சகலசன மும்போற்றச்
சிங்கா சனக்கொலுவில் தேவேந்த்ரன் போலிருந்தான்.

வேட்டைமேற் செல்லல்

அந்தமணி மண்டபமாம் ஆத்தானந் தன்னில்,ஐயன்
சிந்தையுற்று வேட்டையின்மேற்சென்றுவரவேண்டுமென்று

கட்டியரை நோக்கிக் 'கனவேட்டைக் காரருக்கும்
பட்டணத்துச் சேஞ பதிகளுக்குஞ் சொல்லும்'என்ருன்.

அங்கிருந்து கோமான் அரண்மனையின் உட்புகுந்து
தங்கரேக் கென்னத் தயங்குநிசார் தொட்டிறுக்கித் சஉ

---

35. ஆரணம் - வேதம். தமிழ்வேதமாகிய தேவாரப் பதிக மெழுதிய ஏட்டைத் திருஞானசம்பந்தர் வைகையிலே விட்டமையால், 'ஆரணஞ்சேர் வையை நீர்' ஆயிற்று. நாம தீர்த்தம்-கோயில் பிரசாத தீர்த்தம்.

37. சவாது - சவ்வாது. சுந்தரம் - அழகு. துராய் - ஒரு தலையணி. பாகை - அதைக்கொண்ட தலைப்பாகை.

40. ஆத்தானம் - அரசர் கொலு மண்டபம்.

42. அங்கிருந்து - ஆத்தான மண்டபத்தை விட்டு நீங்கி. கோமான் - தலைவன். தொட்டு - அணிந்து.

துப்பட்டா கட்டிவச்ரச் சோடிட்டுத் தூணிகட்டி
ஒப்பிட்டார் கச்சை உடைப்பட்டை யூடுகட்டி, சங

வர்ணமணி யாழி வனசமலர்க் கையிலிட்டுச்
சொர்ணமய மாய்ச்சமைத்த தோற்கவசம் காலிலிட்டு,

வாய்ந்தஉறை விட்டால் மருவலர்கள் மார்புறையாப்
பாய்ந்த சமுதாடு பாங்கணைத்து விற்பிடித்து,

கேழல் புலியானைக் கெர்வங் களையடக்க
ஆளி மலைமுழைவிட்(டு) ஆலித் தெழுந்ததுபோல்

புள்ளிருந்த கூர்நெடுவேற் போசன் அரண்மனையின்
உள்ளிருந்து கோட்டை ஒலிமுகத்து வாசல்வந்தான். சஎ

---

43. சோடு - கவசம். தூணி-அம்பறுத்தூணி. உடைப்பட்டை-உடைவாள் செருகும் பட்டை.

44. ஆழி - மோதிரம். வனச மலர்க் கை - தாமரை மலர் போன்ற கை. சொர்ண மயமாய்ச் சமைத்த - பொன்னிற முடைய தாய்ச் செய்த அல்லது பொன்வைத்திழைத்த.

45. மருவலர் - பகைவர். சமுதாடு - ஈட்டிபோன்ற ஓர் ஆயுதம். பாங்கு அணைத்து - பக்கத்திலே செருகி. அவனுடைய சமுதாடு உறையிலிருந்து வெளிப்பட்டால், பகைவர் மார்பில் சென்று தைத்து, அவர் மார்பே உறையாகப் பொருந்திவிடும்.

46. கேழல் - பன்றி. ஆளி - சிங்கம். முழை - பொந்து. ஆலித்து - கர்ச்சித்து.

47. புள்ளிருந்த கூர்நெடுவேல்: நாயக்கனுடைய வேல் எந் நேரமும் பகைவரைக் கொன்று குவித்தமையினாலே, கழுகுகள் தங்களுக்கு இரை கிடைக்குமென்ற நிச்சயத்தோடு அவ்வேலையே சுற்றிக் கொண்டிருக்குமாம். போசன் - போச மன்னனை யொத்த வள்ளல். போசன், வடநாட்டிலுள்ள தாராநகரத்தில் ஏறக்குறைய 1200 ஆண்டுகளுக்கு முன்னிருந்து அரசுபுரிந்த மன்னன். காளி தாசன் முதலிய பல வடமொழிப் புலவர்களை ஆதரித்து வட மொழியை வளர்த்த வள்ளல். ஒலிமுகத்து வாசல் - ஒலிமுக வாயில் அல்லது புலிமுக வாயில்; அதாவது, நகரம் அல்லது கோயிலின் முன்புறமுள்ள வாயில்.

பரிவாரங்கள்

கொற்றக் குடைபிடிக்கக் கொம்பூதப் பேரிகையும்
வெற்றிமுர சுந்தொனிக்க வீரசின்னந் தான்முழங்க, ௪௮

காலின் கடுமைதனைக் காற்கடுமை யாக்கும்இதன்
காலின் கடுமையெனும் கந்துகமேற் கொண்டருளி,

வெற்றிவடி வாள்பிடித்து வெம்பரியின் மீதேறிச்
சுற்றமெனச் சுற்றுந் துரைமக்கள் சூழ்ந்துவர,

வீரியப்ர தானிகளும் மெச்சுதள கர்த்தர்களும்
காரியப் பேர்மணியக் காரர்கரு ணீகர்களும்

தாக்குதுடி யூழியப்ர தாப வசீகரரும்
ஆக்க மிகுசேர்வை ஆனகுறிக் காரர்களும்

அச்சமில்லா ராணுவப்பேர் அத்தனையுஞ் சோடுகட்டிக்
கச்சைகட்டி ஆயுதமுங் கையுமாய் முன்னடக்க, ௫௩

---

49. காலின் கடுமை - காற்றின் வேகம். காற்கடுமை: சிலேடை; வாயுவேகம் என்றும், நாலிலொரு பங்குள்ள வேகம் என்றும் பொருள்படும். காலின் கடுமை - கால்களின் வேகம். கந்துகம் - குதிரை. காற்றின் வேகம் குதிரை வேகத்தில் கால் பங்குதான் என்று சொல்லும்படி அவ்வளவு வேகமாய்ப் போக வல்லதாம் குதிரை.

50. வடி வாள் - கூர்மையான வாள். வெம் பரி - கோப முடைய குதிரை.

51. கருணீகர் - கணக்கர்.

52. சேர்வை - படைத் தலைவர். குறிக்காரர் - குறிவைத்து விலங்குகளை எய்ய வல்லவர்.

53. சோடு - கவசம். கச்சை - இடுப்பில் அணியும் கச்சு.

54-61. பரிவாரத்திலே சென்ற பல வேறு வீரர்கள் என் னென்ன கருத்தோடு சென்றார்கள் என்பது கூறப்படுகிறது.

அவர்கள் எண்ணுதல்

சிங்கத்தை யானையுஞ் சென்றுகுத்தி எங்கோமான்
தங்கப் பதக்கந் தனைவாங்க வேண்டுமென்றும், ௫௪

கண்ட பெரும்புலியைக் கைக்கோலாற் கொன்றுகுத்தித்
தண்டை மிகுவிருது தான்வாங்க வேண்டுமென்றும்,

துட்டஞ் செயும்புலியைச் சுட்டந்த வெம்புலித்தோல்
ஒட்டும் பரிசைக்(கு) உரித்துவர வேண்டுமென்றும்,

வெண்கவரி எங்கள்திம்ம ராயருக்கு வீசவெள்ளை
வண்கவரி மானைவெட்டி வால்துணிக்க வேண்டுமென்றும்,

வைத்திடும்வைப் பாட்டிபிள்ளை மார்புக் குடைமைபண்ணக்
குத்திப் புலிநகங்கள் கொண்டுவர வேண்டுமென்றும்,

கொண்ட இளைய குடியாள் முடிமயிர்க்கு
மண்டு கருங்கவரி வால்துணிக்க வேண்டுமென்றும்,

வாய்த்த கரடி மணியீரல் பிய்த்தெடுத்துக்
கூத்திக் கிடுமருந்து கூட்டியிட வேண்டுமென்றும், ௬௦

---

54. கோமான் - நாயக்கன். பதக்கம் வாங்குவது, குத்தியதற்குப் பரிசாக.

55. தண்டை - காலணி.

56. புலித்தோலை உரித்துக் கொண்டுவந்து கேடயத்தின் மேற்புறத்திலே ஒட்டுவதற்காகப் புலி வேட்டை. பரிசை - கேடயம்.

57. வண் கவரி-வளம் பொருந்திய கவரிமான். திம்மராயர்-1-ம் கண்ணி பார்க்க.

58. உடைமை - ஆபரணம். புலிப் பல்லையும் புலி நகத்தையும் கோத்துச் சிறு பிள்ளைகளுக்கு அணிதல் வழக்கம்; 'புலிப்பற் கோத்த புலம்பு மணித் தாலி' என்பது அகநானூறு (7). புலி நகத்தைப் பொற்சரட்டிலே கோத்து அணியும் வழக்கம் இன்றும் உண்டு.

59. இளைய குடியாள் - இளைய மனைவி. மண்டு - மயிர் அடர்ந்த. 'கொண்டை விளைய' என்றும் பாடம்.

ஒன்றொன் றொருவர்மனத் துற்றுச் சிலர்வக
வென்றி வெடிகாரர் வேற்காரர் முன்னடக்க, — ௬௧

படை செல்லல்

தானை பிடித்த சவளப் பெருக்கம்உயர்
வானம் விழுதுவிட்ட வண்ணமாய் முன்னடக்க,

கொண்டேகுந் தன்மேளக் கொள்கைபோற் பேசுமுகில்
உண்டோ இலையோஎன்(று) ஒட்டகம்அண் ணாந்துவர,

கொட்டுந் துடியும் குறித்தகரிக் கொம்புகளும்
கட்டும் பெருவலையும் கைவேட்டைக் கத்திகளும்

காட்டுப் புலிக்கழுத்தைக் கவ்வும் புலிபோலக்
கூட்டமிட்ட ஞாளிகளும் குத்தீட்டி யுங்கவணும்

சால்வயிறும் மூன்றுமுழத் தாடிகளுஞ் செந்தலையும்
காலிலிடு தோலடியும் காங்கிட்ட கச்சையுமாய்க் ௬௬

---

61. வென்றி - வெற்றி பொருந்திய. வெடிகாரர் - துப்பாக்கி ஏந்திய வீரர்.

62. தானை - பரிவாரமாகிய சேனை. சவளம் - குந்தம்; 'அடு சவளத்தெடுத்த பொழுது' - கலிங்கத்துப்பரணி (424). தூக்கிப் பிடித்த குந்தங்கள், வானத்திலிருந்து விழுது தொங்கினாற்போலக் காட்சி யளித்தன.

63. தன் முதுகிலிருந்து ஒலிக்கும் மேளம்போல மேகங் கூடப் பேரொலி செய்யாது என்று ஒட்டகம் இறுமாப்படைந்து அண்ணாந்து பார்க்கிறது.

64-67. நாயக்கனை வந்து கண்டுகொண்டு முன்னோடிவரும் வேடர் வருணனை.

64. குறித்தகரிக்கொம்பு - ஊதுவதற்கான கொம்பு என்னும் வாத்தியம்; 'கொம்பு குறித்தல்' என்ற தொடருக்கே கொம்பூதல் என்று பொருள்.

65. ஞாளி - வேட்டை நாய். கவண், கல்லெறிவதற்கு.

66. தோலடி - செருப்பு. காங்கிட்ட கச்சை - கருநீல நிறமுடைய கச்சை.

கானவர்கள் வந்துகண்டு கைகுவித்து முன்னேடச்
சேனைநடு வெள்ளைச் செயடால் இணைத்துவர, ௬௭

போய்அனுமன் பாய்ந்த புகழ்பொரு மற்கதிரைப்
பாயத் திரிவதுபோற் பைங்கருட டாலேக,

சந்த்ரோ தயம்போல் தயங்குஞ் சுருட்டிவரச்
செந்தூளி கண்டுவட சீனங் குடியேற,

தம்பட்ட வோசை தனக்குமக தங்கலங்கக்
கொம்புத் தொனிகேட்டுக் கொச்சி மலைவற,

மங்கலஞ்சேர் பெஞ்சைநகர் வாழ்பெரிய நாகேந்த்ரன்
எங்கள்பிரான் வேட்டைக் கெழுந்தருளும் அவ்வழியில்,—

நற்சகுனமாதல்

போத்தொன் றிடத்திருந்து போய்வலத்தோர் பூமரத்தில்
வாய்த்தபே டொன்றை மருவிக் குரலெழுப்ப, ௭௨

---

67. கானவர் - வேடர். டால் - கொடி; செய டால்-வெற்றிக் கொடி. 'தழைக்கின்ற, சிங்கார வெள்ளைச் செயடாலுங் கண்டிதுவே - எங்கோன் அரண்மனைஎன் றெய்தினேன்'-விறலி. 978-9.

68. கருட டால் - கருடன் போன்ற ஆலவட்டம். அனுமன் குழந்தையாயிருந்தபோது சூரியனைப் பற்ற முயன்றதை எண்ணிப் பொருமை கொண்டு, கருடன் மீண்டும் சூரியனைப் பற்ற முயன்றது போலிருந்ததாம், கருட டால் பறந்த காட்சி. 'பரிதி பகைக்குப் பகையெழுந்த தென்ன, விருதுகரு டாலவட்டம் வீச' - விறலி. 69.

69. சுருட்டி - மன்னர் பரிவார விருதுகளுள் ஒன்று.

69-70. சீனம், மகதம், கொச்சி: நாயக்கன் படைகள் வேட்டைமேற் சென்ற ஆரவாரங் கேட்டு இந்நாடுகள் நடுங்கினவாம்.

72. போத்து - செம்போத்து என்ற பறவை. 'செம்போத்துடன் மேதி...முயல் இவையனைத்தும் வலமாயிடில் வழிப்பயணமாகை நன்றும்.' பேடு - பெண் பறவை.

மண்டலிகர் கண்டனெனும் மால்பெரிய நாயகஉத்
தண்டன்அது கண்டுநகை தந்து மனமகிழ்ந்து ௭௩

ராச சகுனமென்ன ராசேந்த்ரன் முன்னேடி
யோசனேயி னுற்சகுன உண்மையறிந் தானெருவன்,

'வந்தெதிரே போத்து வலம்பாயக் கண்டதனுல்,
முந்தவிந்த வேட்டை முழுவேட்டை யாய்க்கிடைக்கும்;

குக்கில்வனப் பேட்டைக் குரலெழுப்பிக் கூடியதால்
கைக்குள்வசமாகஇன்ருேர் கன்னிமணம் கூடும்' என்ருன்.

காட்டைக் கலேத்தல்

அவ்வார்த்தை சொல்லமகா ராசனுங் கூளேந்த்ரன்
மைவாய்த்த பன்றி மலேச்சாரல் வந்தணுகி,

நாவிடமும் கானவரை நாடிவலே கட்டவிட்டுக்
கோலியகட் டாப்பிற் குழற்கார ரைநிறுத்தி,

ஏறும் பரிவிட் டிறங்கிப் படைக்கலிப்பு
மீறுந் தொனிமுரசு மேகங்கள் போல்முழங்க,

வேலாளும் வில்லாளும் வெல்லும் எறியீட்டிக்
காலாளு மாய்ப்பரந்து காட்டைக் கலேத்துவிட்டார். ௮0

---

73. மண்டலிகர் - மண்டலத்திலுள்ளவர்கள். கண்டன் - தலேவன். உத்தண்டன் - உக்கிரமுள்ளவன்.

74. ராசேந்த்ரன் - ராசேந்திரனை கூளப்பன். குக்கில் - செம்போத்து என்னும் பறவை.

77. மை - கருமை. பன்றிமலே: தலேவனுக்குரிய வராக கிரி (10).

78. கோலிய - சுற்றி வளேத்த. கட்டாப்பு - வேலி யடைத்த நிலம். குழற்காரர் - துப்பாக்கி பிடித்தோர்.

79. படைக் கலிப்பு மீறும் தொனி - படையின் ஆரவாரத்தையும் விஞ்சுகின்ற ஒலியையுடைய.

வேட்டை

பன்றி முயல்கரடி பாய்புலிபுல் வாய்கடமா
ஒன்றொடொன்று தட்டுண் டுலைந்து கலைந்தோட, ௮௧

எய்வாரும், வேலால் எறிவாரும், ஒன்றையொன்றை
வைவாரும், சுற்றி மறிப்பாரு மாய்நெருங்க,

கட்டாப்பில் வந்த கடமாவைப் பின்வாங்க
ஒட்டாமற் குத்தி ஒளிவிருந்த பேரிழுக்க,

சுட்ட புகைவழியே தூக்கவரும் பன்றியுடல்
தட்டுருவி யோடத் தகட்டலகில் வேல்பாய,

வாலடித்து மேல்பதுங்கி வாய்பிளக்க வாள்கிழிக்க
வேல்பிடித்து வீரர்குத்த வீழ்புலிக்கு மேல்துடிக்க,

வலையில்விழு கரடிமுயல் மரையின்மிசை ஞமலிவிழ
அலகின்மிசை பிடரின்மிசை அடிகள்விழ உடல்பதற,

செவ்வியோன் வேசிகையிற் சிக்கி உழல்வதுபோற்
கவ்வியநாய்க் காலிற் கவரிமான் வீழ்ந்துழல,

கூடும்மயிற் கூட்டம் கொடுக்கின்ற தாதாவைப்
பாடும் புலவர் கலிபோற் பறந்தோட, ௮௮

---

81. புல்வாய் - மான். கடமா - காட்டெருமை.

83. ஒளிவிருந்த - ஒளிந்திருந்த.

84. தகட்டலகு - அகன்ற பக்கத்தில்.

85-86. வேட்டையின் கடுமையைப் பாட்டின் சந்தமே உணர்த்துகிறது. மரை - மான். ஞமலி - நாய்.

87. செவ்வியோன் - சிறந்த ஒழுக்க முடையவன்.

88. தாதா - வள்ளல். கலி - வறுமை. மயிற்கூட்டம் ஒலியைக் கேட்டு அஞ்சி ஓடுகிறது.

வட்டமுலை மின்னர் மயக்கறுத்த யோகியைப்போற்
கட்டு வலையறுத்தோர் கான்மேதி போனதுவே. ௮௯

கொட்ட மிடும்புலியைக் குண்டுதுன் றுங்குழலால்
சுட்டதொனி வெற்பைத் தொடர்ந்து சிலையோட,

எம்மான் இடப்புலியும் இந்துமுய லும்மானும்
கைம்மானும் சற்றே கலங்கி மனந்தேற,—

மானைத் தொடர்தல்

இவ்வண்ணம் ஐயன் இயல்வேட்டை யாட, ஒரு
செவ்வண்ண மான்வலையிற் சிக்காம லேகுதித்து,

பற்றவரும் பேர்க்கும் பதிகுழற்கும் எட்டாமல்,
உற்றகவி வாணரைக்கண் டோடும் உலுத்தரைப்போல்

போங்கடுமை கண்டு, புகழ்பெரிய நாகேந்த்ரன்
வாங்கு சிலையும் வடிக்கணையு மாய்விரைந்து,

மானோடப் பற்றஅன்று வந்தரகு ராமனைப்போல்,
தானோடப் பின்னோடித் தாவிக் குதிகுதித்துப் ௯௫

---

89. மின்னர் - மின்போன்ற பெண்கள். மயக்கு - மின்னர் மயக்காகிய காமம். அறுத்த - வென்ற. கான் மேதி - காட்டெருமை.

90. துன்றும் - நிறைந்த. குழல்-துப்பாக்கி.

91. எம்மான் - சிவபெருமான். இடப்புலி - இடப்பக்கமிருந்து நடராசாவின் நடனத்தைத் தரிசித்துக் கொண்டிருக்கும் வியாக்கிரபாதர் என்னும் புலி. இந்து - சிவபெருமான் தலையிலணிந்த சந்திரன். முயல் - அதிலுள்ள முயல். மான் - அம்புலிமான். கைம்மான் - சிவபெருமான் கையிலேந்திய மான். இத்தனையும் கலங்கின, வேட்டையின் ஆரவாரத்தைக் கேட்டு.

92. செவ்வண்ண மான் - செந்நிறமுடைய மான்.

93. பற்ற - பிடிக்க. பதிகுழல் - குண்டை உடலிலே பதியச் செய்ய வல்ல துப்பாக்கி. உலுத்தர் - கருமிகள்; கவிவாணர் கண்டால் பரிசில் கொடுக்க நேருமே என்று அஞ்சி இவர்கள் ஓடி விடுவார்களாம்.

94. கடுமை - வேகம். வாங்கு சிலை - நாணேற்றிய வில். வடிக் கணை - கூரிய அம்பு.

பாரிலிற கில்லாத பட்சிபோற் செல்லநெடுந்
தூரந் தொடர்ந்து தொடுங்கணைக்குப் பூசையிட்டான். ௯௬

மால்தொடர்ந்த மான்ஓர் மயிலைப் பிரித்த(து); ஐயன்
கால்தொடர்ந்த மான்ஓர் கருங்குயிலைக் கூட்டியதே!

சோலையை அடைதல்

சிங்கத்தின் குட்டி சிலைஏந்திச் செல்வதுபோல்
அங்கொருபூங் காவில்விடாய் ஆறத் தனிப்புகுந்தான்.

துன்று தடஞ்சுனைநீர் தோய்ந்துமலர்த் தாதளைந்து
தென்றல்வந்தென் ஐயன் திருமுகத்தின் வேர்வகற்ற,

கற்பகக்கா இந்திரனைக் கண்டுமலர் சிந்துதல்போல்
பொற்புடையோன் மெய்குளிரப் பூங்கானம் பூச்சொரிய,

சந்தனத்தின் மீதிருந்து சஞ்சரிக்கும் பைங்கிளிகள்
சிந்தமன்சேய்க் கின்பம்வரச் சிந்துக் கவிபாட, ௧௦௧

---

96. மானனது இறகில்லாத பட்சிபோல் வேகமாக ஓடுகிறது. தொடுங்கணை - வில்லிலே தொடுத்த அம்பு. பூசையிட்டான்- பலியிட்டான்.

97. இராமன் தொடர்ந்த மாரீச மானனது, சீதையாகிய மயிலை அவனிடமிருந்து பிரிக்கக் காரணமாயிற்று. ஆனால், இத் தலைவன் தொடர்ந்து சென்ற சாதாரண மானனது குயில்போன்ற ஒரு பெண்ணை இவனிடத்துக் கூட்டக் காரணமாயிருக்கிறது.

98. சிலை - வில். விடாய் - தாகம், சோர்வு.

99. துன்று - நெருங்கிய. தாது அளைந்து - பூந்தாதுகளிலே தோய்ந்து அவற்றின் மணத்தைத் தாங்கி.

100. கற்பகக் கா - தேவலோகத்திலுள்ள கற்பகச் சோலை. பொற்பு - அழகு.

101. சிந்தமன் சேய் - சிந்தம கூளேந்திர மன்னன் புதல்வனை நாகம கூளப்பன்.

இங்கிருக்கும் வேளைநல்ல ஏகாந்த வேளையென
மங்கைநல்லாள் தூதுவிட்ட வண்டுபோல் வண்டிரைய,

மையல்கொண்ட மன்னனுக்கு மாலையிட வந்துநின்ற
தையலார் போலச் சரக்கொன்றைக் கொம்பிலங்க, ௧0௩

நங்கோன் துரைபெரிய நாகேந்த்ரன் அவ்வனத்தின்
சிங்காரம் பார்த்துலவிச் சிந்தை மகிழ்போதில்,—

நவரத்தினமாலையின் வருணனை

சாதியொரு நான்கின்முதற் சாதி பதுமினியாம்
மாது நவரத்ன மாலையெனும் பெண்பெருமாள் ;

மதனகலை வாணி மதனசுர தானி
மதனரதிக் கேணி மதனசுப கல்யாணி ;

காம குருபீடம் காமக் கொலுக்கூடம்
காமக் கிரீடமின்பக் காமக் கடலோடம் ; ௧0௭

---

102. ஏகாந்த வேளை - தனித்த நேரம்; காதலிக்கு அருள் செய்ய, தக்க தருணம் என்பது குறிப்பு. இரைய - ஒலிக்க.

103. சரக்கொன்றை சரம் சரமாகப் பூத்துத் தொங்கிய காட்சி, மங்கை மாலை ஏந்தி நிற்பது போலிருந்தது.

104. நம் கோன் - நமது மன்னன். சிங்காரம் - அழகு.

105. சாதி நான்கு: பதுமினி, சித்தினி, சங்கினி, அத்தினி என்ற நான்கு சாதிப் பெண்கள்.

106. மதன கலை - காமக் கலை. சுரதானி - காமலீலையில் வல்லவள்.

107. காமக் கடலோடம் - காமமாகிய கடல் கடக்க ஓடம் போன்றவள்.

மாமுனிவர் வேதஅங்கம் மாமுனிவர் அந்தரங்கம்
மாமுனிவர் ஓதுசங்கம் மாமுனிவர் ப்ராணலிங்கம் ; ௧0அ

தெய்வ ரதிதேவி தெய்வ குணவாவி
தெய்வச் செழுங்காவி தெய்வமலைச் சஞ்சீவி ;

கம்மியன்கை யாலடித்துக் காய்ச்சிவெட்டித் தீராமல்
செம்மலரோன் கைம்மலரால் செய்துவிட்ட பொற்பாவை ;

வாய்பேசா வண்ணம் மதிலொட்டி நில்லாமல்
தாய்பேசப் பேசியின்பந் தந்துலவு ரூபசித்ரம் ;

கையாற் பிடித்தொருவர் கட்ட இதழ் கன்றாமல்
மையார் குழலார் மடியிருக்கும் பூமாலை ;

காற்றிலடி பட்டலைந்து கண்முத் தரும்பாமல்
போற்றி மடவார் வளர்த்தெடுத்த பூங்கரும்பு ; ௧௧௩

---

108. வேத அங்கம் - மாமுனிவர்க்கு வேதாங்கத்தை யொத்தவள். ஓது சங்கம் - முனிவர் பெரிதும் விரும்புகின்ற சத்சங்கம் இவளே என்று சொல்லத்தக்கவள்.

109. குண வாவி - குணக்கடல் என்பது போல. காவி - குவளை மலரை ஒத்தவள்.

110. கம்மியன் - சிற்பத் தொழில் வல்லவன். காய்ச்சி - அனலிலே காய்ச்சி. செம்மலரோன் - செந்தாமரை மலரிலுள்ள பிரமன்.

111. பேசாவண்ணம் - பேசாதபடி. மதில் ஒட்டி - (பதுமை போலச்) சுவரிலே மட்டும் பொருந்தி. தாய் பேசப் பேசி - செவிலித் தாயோடு மட்டும் உரையாடி. ரூப சித்ரம் - உருவ அழகுவாய்ந்த பதுமை போன்றவள்.

112. கட்ட - மாலைகட்ட, கட்டியணைக்க. இதழ் - மலரிதழ், வாயிதழ். மையார் குழலார் - கருங் கூந்தலுடைய பெண்கள், செவிலியர்.

113. கண் முத்து அரும்பாமல் - (கரும்பின்) கணுத்தோறும் முத்து உண்டாகாமல்; கண்ணீர் துளிக்காமல். மடவார் - பெண்கள்.

மொய்க்கும்மணங் குன்றி முகங்கருகி வாடாமல்
மெய்க்குமணம் எந்நாளும் வீசும் மருக்கொழுந்து ; கக௪

பொங்கிச் சிவந்து கறுத்துப் புழுங்காமல்
தங்கநிற மாகச் சமைந்த மணப்பாகு ;

ஓங்கு மலைக்காட்டி னுள்ளிருந்து தூங்காமல்
தூங்குசப்ர மஞ்சமிசைத் தூங்கும் நவரசத்தேன் ;

மொய்த்த மலைக்காட்டு முள்ளூ டலையாமல்
மெத்தையின்மே லேறி விளையாடுந் தோகைமயில் ;

கொம்புதொறும் போய்த்தாவிக் கூவித் திரியாமல்
அம்பொன்மணி யூசலிருந்(து) ஆடுங் குயிற்பேடு ;

கொஞ்சி மொழிகுழறிக் கூட்டிற் கிடவாமல்
செஞ்சொல் மதனகலை செப்பும் கிளிப்பேடு ;

கன்னியர்க்குத் தன்நடையைக் கற்பித்த பேடையன்னந்
தன்னை நடைபயிற்றும் சாதி யனப்பேடு ; கஉ0

---

114. நேரமாக ஆக, மருக்கொழுந்தானது பசுமை கருகி வாடி மணங் குன்றிவிடும் ; இக்கொழுந்து அப்படியன்று.

115. மணப்பாகு - மணம் நிறைந்த சர்க்கரைப்பாகு. சர்க்கரையை அடுப்பிலிட்டுக் காய்ச்ச அது பொங்கிச் சிவந்து கறுத்துப் புழுங்கிப் பிறகு தான் பாகு ஆகும்; இப்பாகு அப்படிப்பட்டதன்று.

116. தூங்கும் - உறங்குகின்ற, தொங்குகின்ற.

117. மொய்த்த - நெருங்கிய.

118. கொம்பு - மரக்கிளை. பேடு - பெண்பறவை.

119. மதனகலை - காமக்கலை.

120. பேடையன்னந்தன்னைப் பயிற்றும் என்க. அனப்பேடு - பெண் அன்னப்புள்.

தேய்ந்துபோ கிக்கச் செறிந்தகுணம் போகாமல்
தோய்ந்துபோ கிக்கத் துலங்குகின்ற சாதிமுத்து; க௨க

ஒப்பமிட்ட செப்பில் ஒளித்துக் கிடவாமல்
செப்பமிட்ட செப்பிரண்டும் தாங்கிவருஞ் சீவரத்னம்;

நீறான காமன் நிமலனார் மீதில்வைத்த
மாறா மனவயிரம் மாற்றவரும் மாவயிரம்;

கண்ணுக்குட் கண்மணிபோல் கண்மணிக்குட்
பாவையைப்போற்
பெண்ணுக்குப் பெண்ணாசை கொள்ளவந்த பெண்ணரசு.

அவளுக்கு நற்சகுனமாதல்

அன்றுகுண மாலைஎனும் அன்பான பாங்கியைப்பார்த்(து),
'இன்றெனது கண்ணில் இடக்கண் துடிக்கு(து)' என்றாள்.

---

121. போகிக்கத் தேய்ந்து - உபயோகிப்பதனாலே (முத்தானது) தேய்ந்து ஒளிகுன்றும். செறிந்த குணம் - அதனிடம் இயல்பாகப் பொருந்திய ஒளி. துலங்குகின்ற - ஒளிவிட்டு விளங்குகின்ற.

122. உண்மை ரத்தினமானது செப்பினுள் மூடி முத்திரை வைக்கப் பெற்றிருக்கும்; ஆனால் இச்சீவரத்தினமோ, செப்பமுடைய இரண்டு செப்புக்களை (கொங்கைகளைப்) புறத்தே தாங்கி வரும்.

123. நீறான காமன் - சிவபெருமான் நெற்றிக் கண்ணால் எரிந்துபோன மன்மதன். நிமலனார் - சிவபெருமான். மன வயிரம் - மனத்திலுள்ள கோபம்; தன்னை நீறாக்கிவிட்டதனாலுண்டான கோபம். மாற்ற வரும் மாவயிரம் - போக்கவல்ல பேரழகு படைத்த வயிரம் போல்வாள். மாறாவயிரம், மாற்றவரும் வயிரம் என்பது முரண்.

125. அன்று - தலைவன் வேட்டைக்குப் போன அன்று.

'தோளின் இடப்பால் துடிக்குதெனஉரைத்த
வாளிநெடு வெட்டுப் படித்த வரிவிழியாய்! கஉசு
கன்னி யழியாத காரிகையே! இன்றுனக்குச்
சொன்னேன், அதிகசுப சோபனமுண் டாகு(து)' என்றாள்.

அவளை அலங்கரித்தல்

பாங்கியுரை கேட்டு,மற்றைப் பாங்கிமார் தம்முடனே
பூங்குழலாள் காவின்மலர் பூவெடுக்க வேண்டுமென்று,
பச்சைப் பரிமளங்கள் பாங்காய்க் கலந்தரைத்த
கொச்சிமஞ்சட் பூசிக் குளித்ததிரு மேனியின்மேல்
சாந்து புழுகு சவாதுகதம் பம்பூசிக்
காந்திதர வெண்சலவைக் கண்டையிட்ட சேலைகட்டி,
காவி வரிநெடுங்கட் காரிகைக்குப் பாங்கியர்கள்
சீவி வகுப்பெடுத்துச் சேர்த்துக் குழல்முடித்து, கங௧

126-7. தோழி குணமாலை கூறுகிறாள்.

126. கண் துடித்ததென்றும் தோள் துடித்ததென்றும் வேற்றுமை பாராட்டாமல் பாங்கி பேசுகிறாள். உரைத்த வரிவிழியாய் என்று கூட்டுக. வரிவிழியானது வெட்டுகின்ற கூர்மை பெற்ற தன்மை வாளிநெடு படித்தது என்க. வரி விழியாள், நவரத்தினமாலை.

127. சொன்னேன் - இடக்கண் துடித்ததன் பலனைச் சொன்னேன், கேள்.

128. பூங் குழலாள் - நவரத்தினமாலை. காவின் மலர் பூ - சோலையில் மலர்ந்துள்ள பூ.

129. கொச்சி மஞ்சள் - மஞ்சளுட் சிறந்த ஒரு வகை.

130. காந்தி தர - ஒளிதரும்படியாக. கண்டையிட்ட சேலை - சரிகைச் சேலை (கண்டாங்கி).

131. காவி - கருங்குவளை மலரையொத்த. வரி நெடுங்கண் - செவ்வரி படர்ந்த நீண்ட கண்களையுடைய.

மையெழுதிப் பொட்டெழுதி வட்டமிட்ட கொங்கைக்குத்
தொய்யில் எழுதித் துணையடிக்குப் பஞ்செழுதி, ௧௩௨
ஆடகப்பொன் மெட்டிட்(டு) அழகுவெள்ளித்
தண்டையிட்டுப்
பாடகங்க ளிட்டுப் பசும்பொற் சதங்கையிட்டு,
முத்தார மேகலைமேல் மூன்றடுக்குப் பொன்னரைஞாண்
வைத்தாரக் கட்டி மருங்கொட்டி யாணமிட்டு,
செய்ய கொடிப்பவளஞ் செம்மணிகள் ஈன்றதுபோல்
கைவிர லுக் கேற்றரத்னக் கல்மோ திரங்களிட்டார்;
கட்டிப் பவளம் கனகவளை பொற்கடகம்
தட்டுச் சரியைச் சரியாகக் கைக்கணிந்து,
பட்டு ரவிக்கையிட்டுப் பட்டையப்பொற் காறையிட்டு
வட்டமுலை மார்பிலங்க வச்ரச் சவடியிட்டார்;
மோகனப்பொன் மாலையிட்டு முத்துமணி மாலையிட்டுப்
பூகத்தை வச்ரமணிப் பூடணங்க ளால்மறைத்தார்; ௧௩௮

MADRAS

---

132. தொய்யில் - சந்தனக் குழம்பால் எழுதும் வரிக் கோலம். பஞ்செழுதி - செம்பஞ்சுக் குழம்பூட்டி.

133. ஆடகப் பொன் - சாதரூபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்பூநதம் என்ற நால்வகைப் பொன்னுள் ஒன்று.

134. முத்தாரம் - முத்து மாலை. ஆரக் கட்டி - பொருந்தக் கட்டி. மருங்கு - இடையிலே.

135. செய்ய - சிவந்த. பவளக்கொடி போன்ற விரலிலே ரத்ன மோதிர மிட்டார்கள்.

136. சரியை - வளையலை; சரி - ஒருவகை வளை.

137. காறை, சவடி - கழுத்திலணியும் அணிகள்.

138. பூகம் - கமுகு; இங்கே கமுகுபோன்ற கழுத்து; கழுத்தைக் காறை, சவடி, மாலை முதலிய அணிகளால் மறைத்து விட்டார்கள். பூடணம் - பூஷணம்.

வாய்க்குமொரு வட்ட மதியொருமுத் தீன்றதுபோல்
மூக்குத்தி முத்து முகத்துக் கிணங்கவிட்டார் ; கநகூ

கொந்தளப்பொன்னோலையிட்டுக் கொப்பிட்டுவாளியிட்டுச்
செந்திருவிற் கேற்கத் திருவும் பிறையுமிட்டுக்

கொண்டை சுருட்டிமுத்துக் குச்சிட்டுக் குப்பியிட்டுத்
துண்டப்பிறைக்கிணங்கச் சுட்டியொன்றுகட்டிவிட்டார்;

பூட்டினார்பொற்சிலைக்குப் பொன்னிடுவார்போலுடைமை,
சூட்டினார் பூமாலை, சுற்றினார் தோழியர்கள்.

பூங்கா அடைந்து பூவெடுத்தல்

ஞாலம் புகழும் நவரத்ன மாலைமின்னாள்
கோலஞ் சிறந்தமலர் கொய்யவென்று தான்நடந்தாள்.

வங்கார மாலை,முத்து மாலை, குணமாலை,
சிங்கார மாலை, திகழ்மோ கனமாலை,

சம்போக வல்லி, சரசவல்லி, காமவல்லி,
அம்போ ருகக்கண் ணமிர்தவல்லி, நீலவல்லி,

மோகரத்னம், மாதுரத்னம், முத்து வசந்தரத்னம்,
நாகரத்னம் என்னுமந்த நல்லஉயிர்ப் பாங்கியருந் கசசு

---

139. சந்திரன்போன்ற முகத்திலே முத்து மூக்குத்தி இட்டார்கள்.

140. கொந்தளம் - கூந்தல். ஓலை, கொப்பு, வாளி : காதணி வகைகள். செந்திரு - செய்யாளாகிய இலக்குமி. திரு, பிறை - தலையணி வகைகள்.

141. சுட்டி - நெற்றியிலணியும் அணி.

142. உடைமை - ஆபரணம்.

143. ஞாலம் - உலகம். கோலம் - அழகு.

144-6. வங்காரமாலை முதல் நாகரத்னம் வரை அனைவரும் நவரத்தினமாலையின் தோழிகள். அம்போருகக் கண் - தாமரை யொத்த கண்ணையுடைய.

தானுமாய் அந்தமலர்ச் சண்பகப்பூங் காவனத்தில்
மானினங்கள் சூழ வரும்பிடிபோல் வந்தணுகிக் கசஎ

கொய்யுமலர் வண்டெழுந்து கோகனகப் பூவெனச்செங்
கைம்மலரைச் சுற்றக் கடுகிமலர்ப் பூவெடுத்தாள்.

பூங்கொடிபோல் நின்றுலவிப் பொன்னனையாள் பூவெடுத்தாள்
பாங்கிமா ரெல்லாம் பரந்தோடிப் பூவெடுத்தார்.

வாளையொத்த செங்கருங்கண் மானார் மதராசன்
பாளையத்தைக் கொள்ளையிடும் பண்பாய் மலர்பறித்தார்.

அங்குநின்ற பெண்களெல்லாம் அங்கங்கே போய்மறைய,
இங்குநின்ற பேதை இனம்பிரிந்த மான்போல

மெல்லத் தனிநடந்து, வெட்சி இருவாட்சி
மல்லிகைசெவ் வந்தி மலர்ந்தபிச்சிப் பூவெடுத்து,

தோட்டுப்பூ முல்லைமுதல் தூயகொடிப் பூவெடுத்துக்
கோட்டுப்பூ மீதில்அந்தக் கொம்பனையாள் மாலானாள். கருரு

---

147. தோழியராகிய மானினங்கள் சூழ, நவரத்னமாலை பிடிபோல் வந்தாள்.

148. அவள் கொய்த மலரிலிருந்த வண்டானது எழுந்து, அவளுடைய சிவந்த கையைச் செந்தாமரை மலரென்றெண்ணிச் சுற்றத் தொடங்கவே, அவள் கடுகிப் பூவெடுக்கலானாள். கோகனகம் - செந்தாமரை. கடுகி - விரைந்து.

149. பொன்னனையாள்-இலக்குமி போன்ற நவரத்ன மாலை.

150. மானார் - மான்போன்ற தோழியர். மதராசன் பாளையம் - மன்மதன் சேனை. கொள்ளையிடும் பண்பு - மன்மதனுக்கு மலரே அம்பானமையினாலே, அவற்றைக் கொள்ளையிடுவதொப்ப.

151. பேதை - நவரத்னமாலை.

152. இவை கொடிப்பூவும் புதர்ப்பூவும்.

153. தோட்டுப் பூ - இதழ்களையுடைய பூ. கோட்டுப் பூ: கொடிப்பூ, கோட்டுப்பூ, நீர்ப்பூ, புதர்ப்பூ என்ற நான்குவகைப் பூவுள் ஒன்று; உயர்ந்து வளர்ந்த மரங்களின் பூ. மாலானாள் - விருப்பங்கொண்டாள்.

கோட்டுப்பூ வேண்டல்

காவி இரண்டிருக்கக் கஞ்சமலர் அஞ்சிருக்கப்
பூவி னிறங்குன்ருப் புன்முருக்கம் பூவிருக்க,

கோங்கரும் பிரண்டிருக்கக் கோவையிட்ட முல்லைமுகை
பூங்குமுதத் துள்ளிருக்கப் பூஞ்சண் பகமிருக்க,

பூதலத்தி லேதாம் பொதிவைத் திரப்பவர்போல்
மாதரசி பூத்த மரந்தோறுஞ் சென்றுசென்று,

‘ சாதிநறுஞ் சண்பகமே, தாதுளபூந் தாதகியே!
கோதிக் குழல்முடிக்கக் கோலமலர் தாரீரோ?

மந்தாரை யே,செருந்தி, மாமரமே! நீர்எனது
சந்தாபந் தீரத் தரிக்கமலர் தாரீரோ?

பாதிரியே, காவிற் பனிநீர்ப் பருமரமே,
மாதவியே! நீர்எனக்கு வண்ணமலர் தாரீரோ?

154-155. காவி, கஞ்சம், புன்முருக்கு, கோங்கு, முல்லை, குமுதம், சண்பகம் ஆகிய மலர்கள் தன்னிடமேயிருக்க, இவள் வீணிலே சென்று பூவெடுத்து வருந்துகிருள் என்கிருர். காவி இரண்டு - கண்கள். கஞ்சமலர் அஞ்சு - (கஞ்சம் - தாமரை) முகம், கையிரண்டு, காலிரண்டு. நிறம் குன்ரு - செம்மை குறையாத. புன்முருக்கம்பூ - சிவந்த வாயிதழ். கோங்கு அரும்பு இரண்டு - முலைகள். கோவையிட்ட முல்லை முகை - வரிசையான பற்கள்; முகை - அரும்பு. பூங்குமுதம் - வாய். சண்பக அரும்பு - மூக்கு. இம்மலர்கள் அவ்வவ்வுறுப்புக்களுக்கு உவமை.

156. பூதலம் - உலகம். பொதிவைத்து இரப்பவர் - தாமே பொருள்களை மிகுதியாகப் பெற்றிருந்தும் பிறரிடம் சென்று யாசிப்பவர்.

157. தாதகி - ஆத்தி.

158. சந்தாபம் - மனத்துன்பம். தீர - தீரும்படியாக. தரிக்க- அணிந்து கொள்ள.

159. காவில் - சோலையில். பனிநீர்ப் பருமரம் - பெரிய பன்னீர் மரம். மாதவி - குருக்கத்தி மரம். வண்ண மலர் - அழகிய மலர்.

விண்ணார்ந்த புன்னை விருட்சமே, குங்குமமே!
அண்ணாந்து நிற்குமெனக் கானமலர் தாரீரோ?
அம்பிட்ட கண்ணார் அகன்றுவிட்டார்; உங்களைநான்
கும்பிட்டேன், கோகிலங்காள்! கொய்துமலர் தாரீரோ?'
என்ற உரைகேட் டெழிற்குயிலும் பூங்கிளியும்
கன்றிமனம் நாணியந்தக் காவின் புறத்தொதுங்க,
பூமரத்தின் நீழலிலோர் பூங்கொடிபோல் நின்றுலவித்
தாம நறுங்குழலி தானொருத்தி யாகிநின்றாள்.

தலைவன் அவளைக் காணுதல்

ஏந்தும் இளமுலைப்பெண் ஏகாந்த மாயிருக்க
நாந்தகவீ ரன்பெரிய நாகமகூ ளேந்த்ரதுரை
பண்டுதனை வென்ற பகைதீரக் காமனுருக்
கொண்டு சிவனைவெல்லக் கூரம்பு தேடுதல்போல்,

---

160. விண்ணார்ந்த - வானத்திலே சென்று பொருந்திய தென்று சொல்லும்படி ஓங்கி வளர்ந்த.

161. அம்பிட்ட கண்ணார் - அம்புபோன்ற கூரிய கண்ணை யுடைய தோழியர். கோகிலம் - குயில்.

162. எழில் - அழகுடைய. கன்றி - மனம் வெதும்பி. நாணி - அவர் குரலுக்குத் தோற்றோம் என்ற எண்ணத்தினாலே நாணி.

163. தாம நறுங் குழலி - மாலையணிந்த மணம்பொருந்திய கூந்தலையுடைய நவரத்னமாலை. ஒருத்தியாகி - தோழியரைப் பிரிந்து தனித்தவளாகி.

164. ஏகாந்தமாய் - தனியாய். நாந்தகம் - வாள்.

165. பண்டு - முன்னமே. தனைவென்ற பகை - தன்னை (மன்மதனை) சிவபெருமான் எரித்த பகை. உருக்கொண்டு - கூளேந்திர னென்ற உருவத்தை எடுத்துக்கொண்டு.

வண்டுலவும் போது மலர்ந்தபெருஞ் சோலைவளம்
கண்டுலவும் போதில்எதிர் கண்டான் விழிகுளிர ; கசுசு
'நீரரமின் ஞளோ, நிசநாகக் கன்னிகையோ ?
சூரரமின் ஞளோ, சுரலோக மேனகையோ ?
கண்ணிமையும் மண்ணிலிட்ட காலும் மனந்திகைத்த
எண்ணம் அகற்றியதால் இவ்வுலகிற் பெண்ணரசே !'
என்றடுத்து மின்ஞள் இருசெவிக்கும் இன்பமுறக்
குன்றடுத்த பூங்காவிற் கோமான் உரைக்கலுற்ருன் :

அவன் கூறுதல்

'ஊரே திருக்கும் உலகே(து), உமதுதிருப்
பேரேது, வார்த்தையொன்று பேசிஞ லாகாதோ ?
ஐவிரலிக் குள்ளே அமர்ந்த சிவஞர்க்குத்
தெய்வ வடிவெடுத்த சேயிழையும் நீர்தாமோ ? கஎக

---

166. வண்டு உலவும்போது - வண்டு மொய்த்த மலர். விழி குளிரக் கண்டான், கூளேந்த்ர துரை.

167. நீரரமின்ஞள் - நீரில் வாழும் தெய்வப்பெண். நிச - உண்மையான. சூரரமின்ஞள் - தெய்வலோகப் பெண். சுரலோகம் - தேவலோகம்.

168. கண் இமைத்தலாலும், கால் மண்ணில் தோய்தலாலும், நீ தெய்வப் பெண் அல்ல, இவ்வுலகத்து மானுடப் பெண்ணே என்றறிந்தேன்.

169. அடுத்து - நெருங்கி. மின்ஞள் - நவரத்ன மாலையின். குன்றடுத்த பூங்கா - மலைச்சாரலிலுள்ள அச்சோலை.

170. ஐவிரலி - ஐவேலி என்ற கொடி. ஓரசுரன் தவத்துக்கு மகிழ்ந்து அவன் கேட்டபடியே யார் தலையில் அவன் கைவைத்தாலும் அவர் அழிவார் என்ற வரத்தைச் சிவபெருமான் அளித்தார் ; அவன் அவர் தலையிலேயே கைவைக்க வந்தான். வரம் பொய்க்கலாகாதே என்றெண்ணிச் சிவபெருமான் ஓடி ஒரு ஐவேலிக்காயில் ஒளிந்தார் ; திருமால் ஓர் அழகிய மோகினி வடிவெடுத்து வந்து அவனை மயக்கி, முழுகி அவன் தலையையே துவட்டச் செய்தலும் அவன் தலையில் கைபடவே அவன் இறந்தான் என்பது புராணக் கதை. அந்த மோகினி நீ தானே என்று இவன் கேட்கிருன்.

பந்தெழுப்புங் கையால், பரன்எரித்த மன்மதனை
வந்தெழுப்பிக் கொண்ட மகராசி நீர்தாமோ? களஉ

பண்டுநள ரூபம் பலரெடுக்க வேநளனைக்
கண்டுமண மாலையிட்ட காரிகையும் நீர்தாமோ?

தெய்வரம்பை மின்னார் திருவழகெ லாந்திரட்டிக்
கைவருந்த வேதன்உமைக் கற்பித்து விட்டானோ?

என்பட்ட மென்றுவரும் இந்திரனார் பட்டமெலாம்
தன்பட்ட மாக்கும் சமர்த்தியார் நீர்தாமோ?

அவளழகை வருணித்தல்

தெண்டிரையி லோடிமலை சென்றேறி வாய்வெருவிக்
கொண்டல் திரிவதுங்கள் கூந்தலுக்குத் தோற்றலவோ?

தேய்ந்தபிறை உங்கள் திருநுதலென் றல்,அதிலே,
ஆய்ந்தமணிச் சுட்டி அணிந்திருக்கக் காணேனே! களள

---

172. பந்தெழுப்புங் கை - பந்தாடுகின்ற கை. பரன் - சிவ பிரான். மகராசி - ரதி. சிவபெருமான் நெற்றிக்கண்ணால் எரிந்து போன மன்மதனை, ரதிதேவி வேண்டியதன்மேல், அவள் கண்ணுக்கு மட்டும் அவன் புலப்படும்படியும் பிறர் கண்ணுக்குப் புலப் படாதபடியும் இருக்குமாறு எழுப்பித்தந்தார் என்பது வரலாறு.

173. காரிகை - தமயந்தி.

174. தெய்வ ரம்பை மின்னார் - ரம்பை போன்ற தேவ லோகத்துப் பெண்கள். வேதன் - பிரமன். கற்பித்து - படைத்து.

175. அகலிகை வரலாறு.

176. இது முதல் அவள் அழகைக் கேசாதிபாதமாக வருணித்து, உவமையாகக் கூறப்படும் பொருள்கள் யாவும் அவள் உறுப்புக்களின் அழகுக்குத் தோற்கும் என்று கூறுகிறான்.

176. தெண்டிரை - கடல். கடலிலும் மலையிலும் மேகம் ஓடித் திரிவது, உன் கூந்தலின் பெருமைக்கும் கருமைக்கும் அஞ்சி. வெருவி - அஞ்சி; அதாவது இடியிடித்து. உங்கள் - உன்; மரியாதைப் பன்மை.

பூமன் வளைத்த புருவத்துக் கந்தரதி
காமன் வளைத்த கரும்புருவம் ஒப்பாமோ? ௧௭௮

அவ்வேதங் கொண்ட அருங்கயல்போல் வேதன்இனி
எவ்வேதங் காணப் படைத்தான் இருவிழியை?

சன்னதவேள் கீர்த்திப்ர தாபம், புரிந்தகொலை,
வன்னமென மூன்றும் இருப்பதுங்கள் வாள்விழியே!

வல்லையப்போ ருக்கொதுங்கேன், வாள்வேல்படைக்கொதுங்கேன்,
மெல்லிநல்லீர்! உங்கள் விழியம்புக் கச்சமுற்றேன்!

தூக்குமூக் குத்திமுத்துத் தூக்காக் குமிழையுங்கள்
மூக்குக் குவமைசொன்னால் முத்தமிழோர்க் கொவ்வாதே!

---

178. பூமன் வளைத்த புருவத்துக்கு - பிரமன் உனக்குப் படைத்த புருவத்துக்கு. அந்த ரதி காமன் - மன்மதன். கரும் புருவம் - கரும்பாகிய வில்லின் வடிவம், கரிய புருவம்.

179. திருமால் மீனாக வந்து வேதங்களைக் காப்பாற்றினான். அது போல, எவ்வேதங் காணப் பிரமன் உன் விழியாகிய இரு மீன்களையும் படைத்தான்?

180. சன்னதவேள் - மன்மதன். அவன் கீர்த்திப் பிரதாபத்தைக் குறித்து நிற்கும் கொடி, மீனக்கொடி. அவனுடைய பஞ்சபாணங்களுள், கொலை புரியும் பாணம், நீலமலர் (கருங்குவளை) என்ற பாணம். அவன் வண்ணம் (நிறம்) கறுப்பு. இவளுடைய வாள்போன்ற விழி, மீன்போன்றது, கருங்குவளை போன்றது, கருமை பொருந்தியது; ஆகவே, இவை மூன்றும் அவ் விழியிலே இருக்கின்றன.

181. வல்லையம் - ஈட்டி போன்ற ஆயுதம். மெல்லி நல்லீர்- மென்மையான பெண்ணே. இப்படிப் போர் செய்யப் பின்வாங்கேன்; ஆயினும் உன் நோக்கு ஒன்றுக்கே அஞ்சுகின்றேன்.

182. குமிழ் உன் மூக்குக்குவமையானாலும், உன் மூக்கணிந்த முத்து மூக்குத்தி, குமிழுக்கு இல்லை; ஆகவே முத்தமிழோர் இவ்வுவமையை ஏற்றுக் கொள்ளமாட்டார்கள்.

மாங்கனிக போலமென்றும், வள்ளைகா தொக்கு மென்றும்,
பாங்கில் உவமைகண்டேன், பல்வரிசைக் கென்சொல்வேன் ?

வித்துருமந் தன்னையுங்கள் மெல்லிதழ்என் ருல்,இதிலே
முத்தங் கிடைக்கும்,அதில் முத்தங் கிடையாதே ! கஅச

இபமான மென்முலையீர் ! இந்துமுகத் துக்கோர்
உபமானஞ் சொல்ல ஒருபொருளுங் காணேனே !

சங்கமுத்தும் உங்கள் தனிக்கமுத்தென் ருல், உகிரால்
அங்கழுத்தும் ரேகை அதிற்பதிய மாட்டாதே !

தோளுக்கு மூங்கிலிணை சொன்னல், பெருஞ்சோதி
நாளுக்கு மின்மினியை நாவலரும் சொல்வாரே !

காந்தள்வனஞ் சென்றதுங்கள் கைபோலுந் தானிருக்க
வாய்ந்ததவஞ் செய்து வரம்பெறுவோம் என்றலவோ ?

தம்புருவை மீட்டியிசைத் தந்திதனில் ஏற்றறியாச்
செம்பவளம் உங்கள் சிறுவிரலுக் கொப்பாமோ ? கஅகூ

---

183. கபோலம் - கன்னம். வள்ளை - வள்ளைக்கொடி. என் சொல்வேன்- என்ன உவமை சொல்ல முடியும் ?

184. வித்துருமம் - பவளம். சிவந்த வாயிதழிலே முத்தங் கிடைக்கும், பவளத்திலே கிடைக்காது.

185. இபமான - யானை போன்ற. இந்து - சந்திரன்.

186. உகிரால் - நகத்தால். சங்கமுத்தும் - சங்கை ஒக்கும். நகரேகை கழுத்திற் பதியும், சங்கிலே பதியாது.

187. இணை - ஒப்பு. பெருஞ்சோதி நாள் - சூரியன்.

188. காந்தள் - காந்தள் மலர்; கைவிரல் போன்றது ; " செங்காந்தள் மெல் விரலால் சேக்கை தடவந்தேன் ' - முத்தொள்ளாயிரம்.

189. ஏற்றறியா - ஏற்ற அறியாத.

வார்த்தைக்குத் தோற்ற வனக்கிளியின் மூக்குமுனை
சேர்த்தநகம் என்றுவமை செப்பினுல் ஒப்பாமோ? ககூ0

பாவின் இயல் கண்டுபல பாடித் தெரிந்துபெருங்
காவியத்தைப் பாடிக் கவிஞர்அரங் கேற்றுதல்போல்,

முந்தச் செழுங்கமலத் துள்ளே முளைத்தெழுந்தோன்
தந்தச் சிமிழ்படைத்துத் தாளவட்டந் தான்படைத்து,

வம்பைச் சமைத்து வடிவுகண்டு, மால்யானைக்
கொம்பைச் சமைத்துக் குணஞ்சற் றதிலறிந்து,

தேங்காயைச் செய்து திரட்சிகண்டு, பொற்குடத்தைப்
பாங்காகச் செய்து பணைப்பதிலே கண்டறிந்து,

விந்ைததரு மேருமுதல் வெற்பெல்லாஞ் செய்தவன்கை
வந்ததற்பின் உங்கள் வனமுலையைச் செய்தானே? ககூரு

---

190. கிளியின் சிவந்த மூக்கு நகத்திற்கு உவமை. கிளி, அவளுடைய சொல்லுக்குத் தோற்றது.

191 முதல் **197** வரை, கொங்கையின் வருணனை. கவிஞர் சிறு பாடல்களையும் பிரபந்தங்களையும் பாடிப் பழக்கம் வந்த பிறகே பெருங் காவியம் செய்து அரங்கேற்றுவார்கள்; அதுபோலப் பிரமனும், சிமிழ், தாளவட்டம், வம்பு முதலியவற்றைப் படைத்துப் பழக்கம் வந்த பின்னரே கொங்கையைப் படைக்கத் தலைப்பட்டான் என்கிறுன்.

192. கமலம் - தாமரை. முளைத்தெழுந்தோன் - பிரமன். சிமிழ், தாளவட்டம், வம்பு, யானைக்கொம்பு, மேரு, தேங்காய், குடம் முதலியன முலைக்குவமை.

193. வம்பு - மிடா. சமைத்து - படைத்து.

194. பணைப்பு - பருமை.

195. மேற்சொன்ன சிமிழ், தாளவட்டம் முதல் மேருவரையுள்ளவற்றைப் படைத்துக் கைத்திறம் வந்ததன் பின்னர்தான் பிரமன் உன் வனமுலையைப் படைத்தானே?

காமன் இமை யாமல்வைத்த கண்கறுப்புப் பாய்ந்ததுவோ,
வாமமுலேக் கண்கள் மணிக்கறுப்பை என்சொல்வேன் !

சூரிய னும் சந்திர னும் தும்பிமுகத் தோ னும்உங்கள்
பார முலேயின் பகையடக்க வோபிறந்தார் ? கசுஎ

ஆலோ வயிறு;தனி ஆலிலேமேற் பள்ளிகொள்ளும்
மாலோ உரோம வகுப்பழகை என்சொல்வேன் ?

வந்திச் சுழியை வலமாகச் சுற்றிலும்நீர்
உந்திச் சுழிகள்உங்கள் உந்திச் சுழியாமோ ?

மெல்லிநல்லீர் ! உங்கள்இடை மின்கொடிபோல் உண்டெனவும்
இல்லேயென வும்படைக்க இரண்டு பிரம னுண்டோ?

வாமமுதற் சாதி வடிவினுல் அல்குலுஞ்செந்
தாமரைப்பூப் போலிருக்கும், சந்தேகம் வேறுமுண்டோ?

வாழைக் குறங்கல்குல் மண்டபமாம் மன்மதனுக்(கு)
ஏழைக் கிரங்குமிடம் என்றென் றறியேனே ! உ0உ

---

196. கண் கறுப்பு - திருஷ்டி. வாம - அழகுடைய.

197. தாமரையும் யானேயும் உன் முலேக்கு உவமை; அதனுலே பகை; சூரியன் தாமரையை ஆட்கொள்பவன்; இந்திரன் ஐராவத மென்னும் யானேயை அடக்கி ஊர்பவன்; விநாயகன் கயமுகாசுரன் என்னும் யானேயை வென்றவன்; ஆகவே, இம்மூவரும் உன் பார முலேயின் பகையடக்கவே பிறந்தார். தும்பி முகத்தோன் - விநாயகன்; தும்பி - யானே. பார - பருத்த.

198. மாலோ - திருமாலோ.

199. வந்து இச்சுழியை நீரானது வலமாகச் சுற்றிலும்(அது) உந்து இச் சுழிகள் உங்கள் உந்திச் சுழி ஆமோ. நீரிலே உண்டா கின்ற சுழல்கள் யாவும் உன் உந்திச்சுழிக்கு ஒப்பாகமாட்டா என்பது கருத்து. உந்து - உந்துகின்ற. உந்தி - கொப்பூழ்.

202. குறங்கு - துடை.

செவ்வரால் கவ்விநின்ற சீர்அலவ ஞெழுழந்தாள்,
அவ்வரா லேச்சுமந்த ஆமையோ பொன்னடிதான்? ௨௦௩

அஞ்சு தலையரவோ, அஞ்சுவிர லும்படமோ,
மஞ்சுவரக் கண்ட மடமயிலோ உம்சாயல்?

பின்னழகைக் காணில்ரதிப் பெண்ணேமதன் நாடுவனே,
முன்னழகைக் காணில் முனிவர்தவஞ் செய்வாரோ?

அவளை வேண்டல்

சேடியரும் இல்லாமல், தேன்மொழியீர்! இவ்வனத்தில்
நாடிவரப் பெற்றதும்முன் நான்செய்த மாதவமோ!

ஏதும்ஒரு வார்த்தை இயம்புகிலீர், உங்களுரை
வேதமோ, கல்லாலின் மேவுசிவ மந்திரமோ?

மேரு கிரியும்அந்த வெள்ளிமலை யும்பார்க்க
நீர்உத் தரிகம் நெகிழவிட மாட்டீரோ?

கையணைவைத் துங்கள் கழுத்தின்மணம் மோந்துகொண்டால்
ஐயமறச் சங்கமுகம் ஆடும் பலனலவோ? ௨௦௯

---

203. அலவன் - நண்டு.

204. மஞ்சு - மேகம்.

207. கல்லாலின் மேவு சிவ மந்திரம்: சிவபெருமான் தக்ஷிணாமூர்த்தி வடிவமாகக் கல்லால மரத்தினடியில் எழுந்தருளிச் சனகாதி முனிவர் நால்வருக்கும் பரஞானத்தைத் தமது மௌன முத்திரையால் உணர்த்தி யருளினர். உரை மந்திரமோ என்றது, அம்மந்திரம் மௌன மந்திர மானதுபோல, அவள் பேச்சும் மௌனம் என்பதைத் தெரிவிக்கிறது.

208. கிரியும் மலையும் கொங்கைகள். உத்தரிகம்-மேலாடை.

209. சங்க முகம் - ஆறு கடலோடு கலக்குமிடம். சங்கு கழுத்துக் குவமையாதலால், சங்கின் முகம் என்பதும் குறிப்பு.

புனைந்ததுகில் சற்றே புறம்போகச் செய்துவிட்டால்
அனந்தசய னத்தலத்தை யானறிந்து கொள்ளேனோ? உ௧௦

தாகமற முத்தமொன்று தந்தால் உமதுசக்ர
வாக முலைக்குமுத்த மாலையாச் சூட்டேனோ?

என்மார் பிலங்கநக ரேகையைவைத் தால்உமது
பொன்மார் பிலங்கரத்ன பூடணமாய்ப் பூட்டேனோ?

பாதி யுடலிற் பரமனொரு பெண்ணைவைத்தான்,
மாதொருத்தி தன்னை மணிவண்ணன் மார்பில்வைத்தான்,

செங்கமல வேதனொரு தேமொழியை நாவில்வைத்தான்,
உங்களைநான் என்மனதுக் குள்ளிருத்திக் கொள்ளேனோ?

வாமத் தரவுமலை மந்தரமுந் தந்தால்நான்
காமக் கடலைக் கடைந்தமிர்தங் காட்டேனோ?

பட்டாடைக் காமன் குளத்தைஎன் றன் பாரிசமா
விட்டால்முப் போக விளைவேற்றிக் கொள்ளேனோ?

வாழையடி முக்காணி வட்டம் எனக்களித்தால்
ஏழை உழுதுபயி ரேற்றிப் பிழையேனோ?

வற்றாச் சமுத்திரமாம் மாரன் அரண்மனைக்குள்
அஸ்தாந் திரமெழுதி ஆண்மை செலுத்தேனோ? உ௧அ

---

211. சக்ரவாகம் - சக்ரவாகம் என்ற மலையை ஒத்த.

213. சிவன் பாதியுடலிற் பெண்ணை வைத்தான். திருமால் திருமகளை மார்பில் வைத்தான்.

214. பிரமன் சரசுவதியை நாவில் வைத்தான்.

213-4. 'பாகத்தில் ஒருவன் வைத்தான், பங்கயத் திருந்த பொன்னை - ஆகத்தில் ஒருவன் வைத்தான், அந்தணன் நாவில் வைத்தான் - மேகத்தில் மிளிரும் மின்னை வென்ற நுண் இடையை நீயும் ... எங்ஙனம் வைத்து வாழ்தி?' என்ற கம்பர் வாக்கைக் காண்க.

218. மாரன் - மன்மதன்.

ஆலடிச் செய்யோ டரசடிவட் டம்விட்டால்முச்
சாலடித்து நல்லவெள்ளைச் சம்பா விதையேனோ? உககூ

தாண்டு மிருகத் தனிவேட்டை வந்தளனை
மீண்டுமொரு காம வேட்டைவிளை யாடவிட்டால்,

கொங்கைமலை பற்றிக் குரலெழுப்பி யேறிநடுப்
பொங்கு கலைகுலையப் புல்லுமரை யுள்ளாக்கிச்

சாய்ந்தவிழி மானிரண்டும் சண்பகக்காட் டிற்குதித்துப்
பாய்ந்துகுமி ழோடொதுங்கி நின்று பரதவிக்க,

மோக வலைக்கு முயல்சிக்கு மின்பமுற
ஆகமலைப் பின்றி அடுத்தொருகை பாரேனோ?

மன்னிப்பா யென்னை வரவழைத்து நீருமது
கன்னிப்போ ராகக் கலவிப்போர்க் கென்னைவிட்டால்,

காமத்தேர் ஏறிநன்றாக் கட்டியிறு கக்கலந்து
தாமவேல் பாயச் சமரின் முனைகாட்டி,

முன்னணியும் பின்னணியும் மொய்த்த குழல்வகுப்பும்
பின்னிடநன் னூலிடைப்ர தாபக் கொடியாட,

தண்டை யொலிமேளம் தாளம் நெகிழ்ந்தகுழல்
வண்டு புறங்கொடுத்து மாற்றலர்கள் போற்பறக்க,

வெம்பிளனைப் பாய்ந்தடர விட்டதன பாரமென்னும்
கம்பமத யானைதனைக் கைப்பிடியா கப்பிடித்து,

சங்கம் முழங்கச் சரிபோகப் போர்முடித்துச்
செங்கைக் கருப்புச் சிலைமதனை வெல்லேனோ? உஉகூ

---

220. தாண்டும் - தாவியோடுகிற.

224. கன்னிப் போர்: 'காசுலாம் கனகப் பைம்பூண் காகுத்தன் கன்னிப் போரில்' - கம்பர்.

227. குழல் வண்டு - வண்டுபோன்ற கூந்தல். மாற்றலர் - பகைவர்.

229. கருப்புச் சிலைமதன் - கரும்பு வில்லேந்திய மன்மதன்.

மேலுலகந் தன்னைவிட்டு மேதினியில் வந்தரம்பை
போலும்உங்கள் யவ்வனமாம் பொய்கைதனில் என்னைவிட்டால்,

ஆடைஒரு பக்கம் அணையிற் கிடக்கஇதழ்
மூடும் இரண்டு முளரிகள்என் மார்பழுந்த, ௨௩௧

ஓர்தா மரைப்பூ உவந்தென் முகத்தணைய,
ஓர்தா மரைப்பூ உலாவிமுது கைத்தடவ,

பின்னொருசெந் தாமரைப்பூ பின்பிடரி யூடுவரக்
கன்னிவராற் சோடு கலந்திடுப்பி னூடொதுங்க,

என்மீது தாவி இருகெண்டை போராட
மென்மா மலர்க்குமுதம் மெல்லமெல்லத் தேனூற,

சைவலமோர் பாற்குலையச் சங்கொலிப்ப வீழ்ந்தெனது
மெய்குளிரத் தோய்ந்து விரகவிடாய் தீரேனோ?

தங்கவிளை யாட்டுத் தனிப்பீட மீதுசது
ரங்கவிளை யாட்டுக் களைத்தீரே யாமாகில்,

கால்பலன்கொண் டேற்றியிரு காரானை முட்டவிட்டு
நாலு முகத்து நடத்துபரி சுற்றவிட்டு,

எட்டெட் டினுக்கும் இணங்கச் சகடேற்றித்
தொட்டதொட்ட வாட்டமெலாந் தோலாமல்வெல்லேனோ?

காதோடு வாதாடுங் கண்மடவீர்! ஒன்றியிலே
சூதாட என்னைவரச் சொல்லியழைத் தீராகில், ௨௩௯

---

231. முளரிகள் - தாமரை மலர்கள்.

232. தாமரைப்பூ - முகம், கை.

233. வராற்சோடு - இரண்டு வராலை யொத்த முன்கால்கள்.

235. சைவலம் - பாசி.

239. காதோடு வாதாடுங் கண் - காதளவு நீண்ட கண். ஒன்றியிலே - தனிமையிலே.

குங்குமக்காய்ச் சோடிரண்டும் கூட்டிக் கலந்தாடி
அங்கம் பசலைக்கா யத்தனையும் போகவிட்டு,

விந்தை தருஞ்சிவப்பை மெல்ல வரநிறுத்தி
அந்தக் கறுப்பையெல்லாம் பின்னே அலையவிட்டு,

ஒருக்கால் இருக்காலோ டொப்பாறு மாறும்
பெருக்காக லக்கம் பிசகாம லேயாடி,

கண்பார்த்து நீங்கள்வெட்டிக் கட்டுத் தொடர்ந்தேறிப்
பண்பாக வீட்டிற் படுத்துவிளை யாடேனோ?

நற்காம பூசை நடத்திடவே நீங்கள் சொன்னால்,
விற்காம தெய்வ விரதந் தனியிருந்து,

மோக சமுத்திரத்தின் மூழ்கிமதன் மந்திரமும்
ஆகவுரு வேற்றி அந்தக் கரணமுடன்

கன்னலொடு தேமாங் கனியருந்திச் செவ்விளநீர்
தன்னைப் பருகிநித்ரைச் சத்துருவைத் தானகற்றி,

சாமஞ்சா மந்தோறும் சங்கரா தத்துடனே
நேமமொடு பூசை நிறைவேற்றிக் கொள்ளேனோ?

கந்தருவமணத்துக் கிசையும்படி வேண்டல்

இந்நேரம் என்சொற் கிரங்குவீர் எப்படியும்,
மின்னே! உமைக்கலந்து மேவாமற் போவேனோ?

ஓடிவலை கட்டி ஒதுக்காம லேளிதில்
நாடிய பொன்மானை நான்விட் டகல்வேனோ?

தாப்பான காடுந் தடவரையுஞ் சுற்றாமல்
வாய்ப்பாக வந்த மயிலைவிட்டுப் போவேனோ?

---

244. விற்காம தெய்வம் - வில்லேந்திய மன்மதன்.

246. கன்னல் - கரும்பு.

249. பொன் மான் - பொன்மானாகிய உன்னை.

250. தாப்பான - தாழ்ப்பான; தாழ்ந்து நெருங்கி வளர்ந்துள்ள. தடவரை - தாழ்ந்த சாரலுடைய மலை.

விண்டுநறுந் தேன்சொரிய மென்கமலப் பூக்கண்ட
வண்டுபடிந் துண்டு மகிழாமற் போவதுண்டோ? ௨௫௧

காந்தர்வ ந்யாயமெனக் கண்டவுட னேஇணங்கித்
தோய்ந்திடுகல் யாணமே சோபனகல் யாணமன்றோ?

கானூரும் வள்ளிதனைக் கந்தனூர் கூடியதும்,
மானாள் சுபத்திரையை வாள்விசயன் கூடியதும்,

தாங்களே சம்மதித்தோ, தந்தைதாய் சம்மதித்தோ?
மாங்குயிலே! என்னை மருவுவதே காரியங்காண்.

மூலக்கோட்டை யுள்ளமுத்து மோகனமே! என்னை
நிலக்கோட்டை வேந்தனென்று நீர்தாம் அறியீரோ?

நானும் நவபுரியான், நாரியர்சி காமணி நீ
தானும் நவரத்ன மாலையென்றால், தாழ்வாமோ?'

என்றுபெருஞ் சூல்கொண் டிரங்கும் மழைக்கெதிரே
சென்று வருண செபஞ்செய் வதுபோல, ௨௫௭

---

251. விண்டு - இதழ் விரிந்து. கமலப் பூ - தாமரை. படிந்து - பொருந்தி.

252. காந்தர்வ நியாயம் - எண்வகை மணங்களுள் காந்தர்வ மணம் என்பதும் ஒன்று; 'இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு, அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கில், காமக் கூட்டம் காணுங் காலை, மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள், துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே' என்பது தொல்காப்பியம்.

253. கானூரும் - காட்டிலிருந்த. கந்தனூர் - முருகன். மானாள் - மான் போன்ற பெண்ணாகிய. வாள் விசயன் - அருச்சுனன்.

256. நாரியர் - பெண்களுக்குள்.

257. நீரைச் சுமந்து இடி முழங்கிவரும் கருமேகம், தானே மழை பொழியும்; அதனெதிரே சென்று, மழை வேண்டுமென்று வருண செபம் செய்யவேண்டியதில்லை. (மழையில்லாது துன்புறும்போது மழை வேண்டுமென்று வருணனைக் குறித்துச் செபம் செய்வது வருண செபம்.)

தன்னிடத்தில் வைத்தமயல் தாங்காதாட் கிச்சைசொல்லி,
அன்னவளைச் செங்கை தொடலுமயிர்க் குச்செறிந்தாள்.

கந்தருவ மணம்

பேகனெனும் பெஞ்சைப் பெரியநா கேந்த்ரதுரை
நாகரிக மோக நவரத்ன மாலையுடன் ௨௫௯

கொங்கலரும் முல்லைக் கொடியும்நறு மல்லிகையும்
பைங்கொடியு மாகப் படர்ந்தமணி மண்டபத்தில்

பூத்துச் சொரிந்தமலர்ப் பூம்பாய லின்மீது
வாய்த்த ரதியும்அந்த மன்மதனும் போலிருந்து,

சீவு பிளவருந்திச் செங்கைச் சுருள்பகிர்ந்து
கோவையிதழ் முத்தமிட்டுக் கொய்யுமலர்ப் பூமுடித்து,

கட்டி யணைத்துக் கனிவா யிதழ்பருகி
வட்ட முலைபிடித்து வண்ணத்துகில் நெகிழ்த்தி,

ஆலிங் கனவிதங்கள் ஐந்தும் புரிந்தரவம்
போலும் கடிதடமாம் பூவைக் கனிவாக்கிப்

பொற்கொம்பும் பூங்கொடியும் பூண்டுதுவண் டாடுதல்போல்
கற்கும்நவ சித்ர கரணவகை பாராட்டி, ௨௬௫

---

258. இதுபோல, தன்னிடத்தில் நவரத்னமாலை தானுகவே காதல் கொண்டிருக்க, அவளிடம் இவன் இவ்வார்த்தைகளைக் கூறுதல் மிகை. மயல் தாங்காதாட்கு - தாங்கமுடியாத காதலுடைய அவளுக்கு. இச்சை - விருப்பமான சொற்கள்.

259. பேகன் - கடையெழுவள்ளல்களில் ஒருவன்; காட்டிற் கண்ட மயிலுக்குப் பொற் படாம் அளித்த கொடைப் பெருமை யுடையவன்.

260. கொங்கு - தேன்.

261. பாயல் - படுக்கை.

262. சீவு பிளவு, சுருள் - தாம்பூலம்.

குங்குமக தம்பமிடு கொங்கையில்ந கம்பதிய
மங்குலின்இ ருண்டகுழல் மஞ்சரிகள் பின்சரிய, உசுசு

வைக்குமுக பத்மமுக வட்டமதி யிற்பதிய
நெக்குருகி நெக்குருகி நெற்றிகளின் முத்துதிர,

பாகனைய வாய்மொழிகள் பாதிதடு மாறஒரு
பூகமிசை காடைகள்பு ருவொலிகள் குகுகுவென,

வரிவிழிகள் கடைபுரள மதுரவிதழ் வெளிறவிரு
பரிபுரமும் வளையும்இடை பதனம்இடை பதனம்என,

ஆவியொன்றுகூடிரண்டுள் ஆசையொன்று நேசமொன்று
மேவுசம்ப்ர தாயமொன்று வேளையிந்த்ர போகம்வந்து

அந்தஅனு போகபர மானந்த சம்போகம்
தந்தசுக் போகஞ் சரிபோக மாய்ப்பெருக,

சோபவிடாய் தீர்த்துச் சுனைநீர் அளைந்துபிர
தாபவிடா யாறி இருக்குந் தருணத்தில்,—

தலைவனைப் பரிவாரங்கள் தேடி வருதல்

நவ்வியபடி பற்றி நடந்தநிக ளங்கமல்லன்
செவ்வியடி பற்றிச் சேனை தளந்தொடர்ந்து உளங

---

266. மஞ்சரி - பூங்கொத்து.

270-1. தலைவனும் தலைவியும் ஈருடலும் ஒருயிருமெனக் காதலித்துக் களவு மணம் செய்தார்கள்.

272. அளைந்து - நீராடி.

273. நவ்வி - மான். வேட்டையாடியபோது மானைத் தொடர்ந்து தலைவன் வந்தான். அவனடியைத் தொடர்ந்து இப் போது அவன் சேனைகள் இச்சோலைக்கு வந்து சேர்கின்றன. நிகளங்கமல்லன் என்பது இத்தலைவன் பெயர்களுள் ஒன்று.

தென்னன் அடிபரவத் தேடிவரும் ஏழ்கடல்போல்
மன்னன் இருக்கும் மலர்க்காவில் வந்தணுகிக் ௨௭௪
கண்ணாரக் காணுமுன்னம் காதாரச் சொற்கேட்டு,
நண்ணார் புகழ்பெரிய நாகமகூ ளேந்த்ரதுரை,
மின்னை நிறுத்திவரும் மேகம்போல், மேகமின்னாள்
தன்னை நிறுத்திவந்து, தானைக் கெதிரானான்.
கானிலிருந் தையன்வரக் கண்டோர் முகங்களெல்லாம்
பானு வரக்கண்ட பங்கயம்போ லாயினவே.

தலைவன் தன்னூர் மீளல்

கொண்டல் படிக்குங் கொடைப்பெரிய நாகேந்த்ரன்
தண்டிகையி லேறியந்தச் சண்பகப்பூங் காஅகன்றான்.
மந்த்ரிதள கர்த்தர்வர மாசேனை முன்நடக்கத்
தந்த்ரதுரை மக்களுடன் சந்தையூர்க் கேமுகமாய் ௨௭௯

---

274. பாண்டியன் அடியிலே ஏழ்கடலும் வந்து வணங்கியதைப்போல, சேனை திரண்டு தலைவனைக் காணவந்தது. ஏழ்கடலும் பாண்டியனைத் தேடிவந்த வரலாற்றைத் திருவிளையாடற் புராணம் எழுகட லழைத்த படலத்திற் காணலாம். தென்னன் - பாண்டியன்.

275-6. படையைக் காணுமுன்னம் அது வந்த ஆரவாரத்தைக் கேட்டு, தலைவன் நவரத்னமாலையைப் பிரிந்து, காவினின்றும் வெளிவந்தான். தானை - சேனை.

277. பானு - சூரியன். பங்கயம் - தாமரை.

278. கொண்டல் படிக்குங் கொடை: 32-ம் கண்ணி பார்க்க. தண்டிகை - சிவிகை.

279. மா சேனை-பெரிய சேனை. சந்தையூர்க்கே முகமாய்-சந்தையூரை நோக்கி. சந்தையூர் முற்காலத்தில் ஒரு தனிப் பாளையப்பட்டாக இருந்துவந்தது.

வந்து நவபுரியில் வாழும் அகோபிலமால்
செந்திருவின் பாதமலர் சேவித்துத் தெண்டனிட்டு,

தீர்த்தமுடன் மாலை திருவடிபெற் றுள்மகிழ்ந்து
வார்த்தை தவ ருதகண்டன் மால்யானை மீதேறி,—

நகரப் பிரவேசம்

தாரை நவுரி தவண்டைதுடி நாகசுரம்
பேரிகைஎக் காளம் பெரியமே ளந்தொனிக்க,

கஞ்சுகியர் கைப்பிரம்பர் கட்டியர்முன் கைநீட்டி,
'பெஞ்சைநகர் வேந்தா, ப்ரதாபநிக ளங்கமல்லா !

துங்கா, சுவாமி, துரைராச சண்ட,சய
ரங்கா, ரணவீம ராயா, ரவுத்ரமிண்டா !

தீர,சுத்த வீர,சுப்ர தீபகர்த்த நாவலர்க்(கு)உ
தார,சத்ரு சேத, நற்ப்ர தாப,வச்ர தேகஉக்ரா !

மகதரங்கர் கவுடர்வங்கர் வடகலிங்கர் குடகர்கொங்கர்
குகுதர்வந்து பணியுமிந்த்ர கொலுவிருந்த புவனசந்த்ரா !

---

280. அகோபிலமால் செந்திரு - திருமாலையும் இலக்குமி யையும்.

281. தீர்த்தம் - பிரசாத தீர்த்தம். மாலை - துளசி முதலிய பிரசாதங்கள். திருவடி - சடாரி.

282. தாரை, நவுரி முதலியன பல்வேறு வாத்தியங்கள்.

283. கஞ்சுகியர் - வேலைக்காரர். பின்வருமாறு கட்டியம் சொல்கிறார்கள்.

284. துங்கன் - உயர்ந்தவன். ரவுத்ர மிண்டன் - கோப முள்ள வீரன்.

285. சுப்ரதீப நாவலர் - இந்நூலாசிரியர். உதார - இவ் வாசிரியருக்குப் பொருள் வழங்கிய வள்ளலே. சத்ரு சேத - பகைவரை அழிப்பவனே.

286. மகதர் முதலிய மன்னர் வந்து இவனைப் பணிகிறார் களாம்.

'சாமீ! பராக்குப் பராக்கெச் சரிக்கை'எனச்
சோமோ தயம்போல் துலங்கு குடைநிழற்றப் ௨௮௭

பக்கக் கவரிரெட்டைப் பாவாடை வீசிவர
மைக்கட் குமரியர்கள் ஆலத்தி வந்தேந்த,

மாலை சரிய வருவார் சிலமடவார்,
சேலை சரிய வருவார் சிலமடவார்;

தண்ணுலவும் பைந்தார் தருவான் எனஓடி
வண்ணவளை தோற்று வருவார் சிலமடவார்;

தேடுபுகழ் வேந்தனுடன் செல்லுமன தைப்பிடிக்க
ஓடுதல்போ லோடியடி ஓய்வார் சிலமடவார்;

வல்லியனை யாள்பதித்த வாய்வடுவைக் கண்டுதங்கள்
மெல்லிதழிற் பற்பதித்து மீள்வார் சிலமடவார்; ௨௯௨

---

287. சோமோதயம் - சந்திரோதயம். துலங்கு - ஒளி விடுகின்ற.

288. ரெட்டைப் பாவாடை: 'திக்கனைத்துஞ் சுற்றச் சிற கடிக்கொள் கீர்த்தியைப்போல், மிக்கிரட்டைப் பாவாடை வீசி நிற்க' - விறலி. 991. மைக்கட் குமரியர் - கரிய கண்ணுடைய இளம் பெண்கள்.

289-293. கண்ட பெண்களின் நிலை.

289. மடவார் - பெண்கள்.

290. தண்ணுலவும் பைந்தார் - குளிர்ச்சி பொருந்திய பசுமையான மாலை. வண்ண வளை தோற்று - தம் கையிலிருந்த அழகிய வளையையும் இழந்து.

292. வல்லியனையாள்: நவரத்னமாலை. வடு - தலைவனிடத்து அவள் பதித்த வடு. இதழிற் பல் பதித்து - தங்களுக்கு இரங்காத அவன் மற்றொருத்திக்கு இவ்வாறு அருள் செய்திருக்கிறானே என்ற ஆத்திரத்தினால் உதட்டைக் கடித்துக்கொண்டு.

ஒருமானைப் பற்றிவிரைந் தோடியவாள் வேந்தன்,
வருமான் அனேகம்எதிர் வந்துநிற்கப் பாராமல்,

வாழி சருவசித்தி வாரணத்திற் றானிறங்கி
ஆழி யனையான்பொன் னரண்மனைக்குள் வந்திருந்தான்.

தலைவனை அவள் தேடுதல்

இங்கே துரைப்பெரிய நாகேந்த்ரன் வீற்றிருக்க,
அங்கே மலர்க்காவில் அன்னநடைப் பெண்பெருமாள்

பேராளன் பெஞ்சைப் பெரியநா கேந்த்ர துரை
வாராமை கண்டு, மதிமறந்து மெய்சோர்ந்தாள்.

ஆனைதனைக் காணா தரும்பிடிபோய்ப் பார்ப்பதுபோல்,
மானனையாள் அந்தமலர் மண்டபமும் நீர்ச்சுனையும்

தேடினாள், மூச்செறிந்தாள், செங்கமலத் தாள்சிவப்ப
ஓடினாள், எங்கோன் உருவெளியைத் தெண்டனிட்டாள்;

'என்னிடத்திற் கோபம்வ(து)?' என்றாள், எழுந்திருந்தாள்,
கன்னல்வளைத்தங்கொருவன் வந்தெதிரக் கண்டயர்ந்தாள்;

காடுருவக் காமனெய்த கைப்பாணம் தைத்துமுலை
யூடுருவ வைவேல் உருவியமான் போலுழன்றாள்;

---

293. வருமான் அனேகம் - எதிர் வந்த பெண்கள் அனேகர்.

294. சருவசித்தி வாரணத்தில் - சருவசித்தி என்ற பெயருடைய தன் யானையிலிருந்து.

295. பெண்பெருமாள் - நவரத்னமாலை.

298. மனக்கண்ணிலே தோற்றிய உருவெளித் தோற்றத்தை வணங்கினாள்.

299. கன்னல் - கரும்புவில். ஒருவன் - மன்மதன். எதிர - போர் செய்ய; விரகதாபங் கொண்டாள் என்பது கருத்து. அயர்ந்தாள் - சோர்ந்தாள்.

300. வை வேல் - கூர்மையான வேல்.

காலா யுதக்கொடியோன் கையா யுதவிழியாள்
மாலா யுதமீன்ற மாமணியைத் தானுதிர்த்தாள்; ௩0௧

அவள் அரற்றுதல்

'பொற்பகலா மாதவியே, புன்னையே, சண்பகமே,
கற்பகமே! என்னுசைக் கற்பகத்தைக் காணீரோ?

காவரசே, ஆயிரச்செங் கண்ணரசு போலிருக்கும்
பூவரசே! பெஞ்சைப் புவியரசைக் காணீரோ?

முன்மான் பிணைநடக்க மோகமாய்ப் பின்தொடரும்
பொன்மானே! என்னுசைப் பூமானைக் காணீரோ?

தோய்ந்த ரவியைத் தொடர்ந்த முகசூர்ய
காந்தமே! என்னுசைக் காந்தன்வரக் காணீரோ? ௩0௫

---

301. காலாயுதம் - கோழி; காலே ஆயுதமாகக் குப்பையைக் கிளறுகிறபடியால். கொடியோன் - கோழிக்கொடியுடைய முருகன். கையாயுதம் - அவன் கையிலுள்ள வேல். விழியாள் - அவ்வேல் விழியாளான நவரத்ன மாலை. மால் ஆயுதம் - திருமாலின் ஆயுதமான சங்கு. அது ஈன்ற மாமணி, முத்து. அம்முத்தை உதிர்த்தாள்; அதாவது கண்ணீர் விட்டாள் என்பது கருத்து.

302. பொற்பு அகலா - அழகு நீங்காத. மாதவி - மாதவி மரம்.

303. கா வரசு - அரசமரம். பூவரசு - மற்றொரு மரம். ஆயிரச் செங்கண்ணரசு - ஆயிரக்கணக்கான பூக்களையுடைமையால், பூவரசமரம் இந்திரன் போலிருக்கிறதாம்; மஞ்சள் நிறமான அதன் பூவின் மத்திய பாகம் கருஞ்சிவப்பு நிறமுடையதாகையால், செங்கண்ணரசு.

304. பிணை - பெண்மான்.

305. ரவி - சூரியன். காந்தன் - காதலன். சூரியகாந்த மலரை விளித்து அரற்றுகிறாள்.

என்னிடத்தில் மாலாகி இச்சைசொலிச் சேர்ந்ததுரை
பின்னெனக்கோர் அந்தரங்கம் பேசாமற் போவானோ?

கானிடத்தில் நானுலவக் கண்டுதனி யாகவந்து
வானவர்கோன் என்னை மனமுருகிச் சேர்ந்தானோ? ௩0௭

தந்திரிகொள் வீணை தனையொளித்து வந்துதெய்வக்
கந்திருவன் என்னைக் கருத்துருகிச் சேர்ந்தானோ?

இந்திரனே யானால்,கண் ஈரைஞ்ஞூ றென்பதுண்டே,
கந்திருவ னேயானால், கண்ணிமைக்கக் காரியமேன்?

பெய்யுங் கொடையான் பெரியநா கேந்த்ரதுரை
ஐயன் அணைந்ததல்லால், ஐயமினி வேறுமுண்டோ?

மன்மதனை வென்று வயங்குந் திருவழகை
என்மனதுக் குள்ளே எழுதவோ வந்தகன்றான்?

கூடியின்பங் கண்ட குதலைமொழிப் பேதைநம்மைத்
தேடிமுகம் வாடித் தியங்குவள்என் றெண்ணானோ? ௩௧௨

---

306. மாலாகி - மோகமுற்று. இச்சை சொலி - பிரிய வார்த்தை பேசி.

307. கானிடத்தில் - காட்டில். வானவர்கோன் - இந்திரன்.

308. தந்திரி - தந்தி.

307-308. தன் காதலனாக வந்தவன் இந்திரனோ அல்லது ஒரு கந்திருவனோ என்று ஐயுறுகின்றாள்.

309. இந்திரன் என்றால் ஆயிரங்கண்ணில்லையே, கந்திருவன் என்றால் கண் இமைக்கிறதே என்று கண்டு, இவ்விருவருமல்லர் என்று தெளிகின்றாள்.

310. பெய்யும் - மழைபோலப் பெய்கின்ற.

311. வயங்கும் - பிரகாசிக்கின்ற.

இந்தக் கவடுசெய்வான் என்றறிந்தாற் கைகலக்கு
முந்தக் குடிலமிட்டு மூன்ருணை கொள்ளேனே? ௩௧௩

தன்னெஞ்சம் போலத் தழுவிப் பிரிந்திருக்க
வன்னெஞ்சி என்ருே மறக்கத் துணிந்தானே!

பேரூர் வழியேநாம் பின்தொடர்வோம் என்ருலும்,
ஒரூரென் ருனிலையே, ஒன்பதூர் என்ருனே!'

என்றிரங்கும் வேளை இருஞ்சே வலைப்பிரிந்த
அன்றிலெனத் தானே சிறியாள் அறிவயர்ந்தாள்.

பாங்கியர் காணுதல்

இவ்விடத்தில் மெய்சோர்ந் திவள்கிடக்க, வெவ்வேருய்
அவ்விடத்திற் பூவெடுத்த ஆயிழையார் எல்லோரும்

குன்றிரண்டு தாங்குங் கொடிபோல் இடைதுவள
நின்று மலர்பறித்த நேரிழையைக் காணமல்,

'மற்ருேர் வனமோநாம் வந்த(து)' எனத்திகைத்துச்
சிற்றடியைக் கண்டார், திரண்டார் ஒருமுகமாய்; ௩௧௯

---

313. கவடு - கபடம். கைகலக்கு முந்த - என்னை அவன் அணையு முன்னே. குடிலமிட்டு - தந்திரம் செய்து. மூன்ருணை கொள்ளேனே - பிரியேனென்று மூன்று முறை ஆணையிடச் செய்வேன்.

314. வன்னெஞ்சி - வன்னெஞ்ச முடையவள்.

315. பேரூர் - பெரிய நகரம். ஒன்பதூர் - கூளப்பன் ஒன் பதூருக்குத் தலைவனைபடியால், தன்னூர் ஒன்பதூர் என்று அவளிடம் சொல்லியிருந்தான். ஒரூரென்ருல் தேடலாம், ஒன்ப தூரை எப்படித் தேடுவதென்று மயங்குகிருள்.

316. இருஞ்சேவல் - வலிமை பொருந்திய ஆண் பறவை. அன்றில் - எக்காலத்தும் தன் துணையை விட்டுப் பிரியாத ஒரு பறவை.

319. நவரத்னமாலையின் காலடியைப் பின்பற்றி வருகிருர் கள். சிற்றடி - அவளுடைய சிறிய காற்சுவடு.

சென்றார் நெடுந்தூரம் 'தேன்மொழியே தேன்மொழியே!'
என்றார், மதிமறந்த ஏந்திழையை வந்துகண்டார். ௩௨௦

அவளை அழைத்துச் செல்லுதல்

கையணையிற் சாய்ந்து கலைகுலையக் கண்முகிழ்ப்பத்
தையல் கிடப்பத் தரியாமற் பாங்கியர்கள்,

' தூக்கமோ, வெம்பசியோ, தோழியரைக் காணாத
ஏக்கமோ, மன்மதன்கண் ணேறுபட்ட காரணமோ?

தெய்வக் குறையோ, நாஞ் செய்வதென்?' என் றேதிகைத்துக்
கையாற் கலைதிருத்திக் கட்டி எடுத்தணைத்தார்.

மாந்தளிரால் வீசி, மதிமுகத்தின் வெயர்துடைக்க,
ஏந்திழையாள் மூர்ச்சைதெளிந்தேங்கினாள்போலிருந்தாள்.

ஒண்டொடியார், மங்கை உடலிற் குறியிடங்கள்
கண்(டு),'இதுஏ(து)?' என்றார்கள்; கள்ளிக்கும் வாயுமுண்டோ?

கைநடுங்கிக் கால்நடுங்கிக் கன்னியர்க ளெல்லோரும்
மெய்நடுங்கித் தாமே விசாரமிட்டுக்கொண்டுநின்றார்; ௩௨௬

---

320. மதி மறந்த - அறிவிழந்திருந்த. ஏந்திழை: நவரத்ன மாலை.

321. கலை குலைய - ஆடை கலைந்து. கண் முகிழ்ப்ப - கண் மூடி. தரியாமல் - மனம் பொறுக்காமல்.

322. வெம்பசி-கொடிய பசி. கண்ணேறு-திருஷ்டிதோஷம்.

324. மாந்தளிரால் வீசியது, வெப்பந் தணிந்து குளிர்ச்சி பெறும்பொருட்டு. ஏந்திழையாள்: நவரத்னமாலை.

325. ஒண்டொடியார் - ஒள்ளிய தொடியணிந்த தோழியர். தோழியர் கண்டு, ' இக்குறிகள் ஏது?' என்றபோது, நவரத்ன மாலைக்கு மறுமொழி சொல்ல வாயெழவில்லை; கள்ளப் புணர்ச்சிக்கு உடன்பட்டமையால், அக்கள்ளிக்கு வாயுமுண்டோ?

326. கன்னியர் - தோழியர்.

வல்லனைய கொங்கை மடமானைக் கைலாகின்
மெல்லமெல்லத் தாம்நடத்தி வீட்டிற் கொடுபோனார்.

பாகார் மொழியாளைப் பஞ்சணையிற் சேர்த்திடலும்,
மோக அனல்மீற முத்தம் பொரிந்ததுவே. ௩௨அ

முன்கை அணிவளைகள் மூச்செறியக் காய்ந்துருகி
மென்குவளைக் கண்ணீரின் வெள்ளத்தால் ஆறியதே.

வீசியவேள் அம்பு மெழுகுபா வைக்குள்உருக்
கூசிகள்போற் பாய உருக்கூசி உள்ளயர்ந்தாள்.

அவளுக்கு உபசாரஞ் செய்தல்

கண்டு சகியார் கருத்திற் சகியாராய்,
ஒண்டொடிக்குச் சீத உபசாரஞ் செய்யலுற்றார்.

செய்தஉப சாரமெல்லாம் தேனாள் பொறாளாகி
வைதுமட வாரை மனங்கொதித்துச் சொல்லலுற்றாள்:

அவள் கூறுதல்

'வேடையெலாந் தீரஎன்மேல் வீசுவார் போலவெயிற்
கோடையெலாம் என்மீதிற் கொண்டுவந்து விட்டீரே!

---

327. வல் அனைய - சூதாடு கருவியை ஒத்த. கைலாகில் - கைகொடுத்துத் தாங்கி.

328. பாகு ஆர் மொழி - பாகு போன்ற மொழி. மோக அனல் - காமாக்கினி. முத்தம் - முத்து மாலைகள்.

329. பெருமூச்சின் வெப்பத்தாலே வளைகள் உருகி, கண்ணீரின் தண்மையால் ஆறின.

330. வேள் அம்பு - மன்மத பாணமானது. உருக்கு ஊசி- காய்ச்சி உருக்கிய இருப் பூசி. உருக் கூசி - உருவம் கூசி.

331. சகியார் - தோழிமார். சகியாராய் - மனம் பொறாதவர்களாய். சீத உபசாரம் - குளிர்ச்சியான உபசாரம்.

333. வேடை - வெப்பம்.

சாளரத்தை நீக்கித் தனிப்புலியைப் பாயவிட்டு,
நீளுமலைத் தென்றலென்றீர், நிட்டூரஞ் செய்தீரே! ௩௩௪

காமரச மெல்லாங் கனகமஞ்ச மேற்பரப்பிப்
பூமலர்என் றீர்,மடவீர்! பொய்யும் படித்தீரே!

சேலென்ற கேதனத்தோன் தேமாலை யைப்பிழிந்து
பாலென்று தந்தீர், பழிகாரர் ஆனீரே!

மங்கைநல்லீர்! என்றன் வனமுலைக்கு நீர்அணிந்த
குங்குமமுஞ் சாந்தும் குளிர்ந்த பனிநீரும்

தேடும் பரத்தையர்பாற் காதலனைச் செல்லவிட்டு,
வாடும் மனையாள் மனம்போற் கொதிக்கு(து)' என்றாள்.

தாய் பாங்கியரை வினவுதல்

என்னப் புலம்பி இவள்படும்பா டத்தனையும்
அன்னைக்குச் சொன்னார்; அவள்பதறி ஓடிவந்தாள். ௩௩௯

பெற்றெடுத்த தன்மகளைப் பேய்க்கிழவி யானாலும்,
குற்றமற நோக்கிக் குறிப்புறவே கண்டுகொண்டாள்.

---

334. சாளரத்தைத் திறந்தவுடனே வந்த தென்றற்காற்று, புலிபோல் பாய்கிறது என்கிறாள்; 'திக்கெலாந் தென்றற் புலி வந்து பாயுதே' என்பது குற்றாலக் குறவஞ்சி.

336. சேலென்ற கேதனத்தோன் - மீனக்கொடியுடைய மன்மதன். பாலுங் கசந்தது என்பதை இப்படிச் சொல்லுகிறாள். மன்மதன் மாலையாகிய மஞ்சளைப் பிழிந்து பாலென்று தந்தீர்களே என்கிறாள்.

337-8. குங்குமமும், சாந்தும், பனிநீரும் எனக்குக் குளிர்ச்சி செய்யாமல், வாடும் மனையாள் மனம்போல் கொதிக்கின்றன; 'செந்தழலின் சாற்றைப் பிழிந்து செழுஞ்சீதச் - சந்தனமென் றூரோ தடவினார்' - நந்திக்கலம்பகம்.

செவ்வாய் இதழ்க்குறியும், செப்புமுலை மேற்பதித்த
கைவாள் உகிர்க்குறியும், கண்மை அழிந்ததுவும், ௩௪௪
பார்த்தாள் ; உடன்போன பாங்கியரைச் சண்டை
யிட்டாள் ;
வேர்த்தாள், மகளை வெகுண்டாள், விசாரமிட்டாள்.
'நீங்களறி யாமலிந்த நேரிழையைப் பூங்காவில்
ஆங்கொருவன் கூடி அணைந்தவகை சொல்லும்' என்றாள்.

பாங்கி கூறுதல்

போனதும் வெவ்வேறாய்ப் பூவெடுக்கும் மங்கைதனி
யானதுவும் கண்டதுவும் ஆயிழையார் தாமுரைத்தார்.
சந்தமுலை யார்உரைக்கத் தையல்குண மாலைசொல்வாள் :
'அந்த வனத்தில் அசுகையுற்ற வேளையிலே,
சுற்றியடி பார்த்தேன் ; துரைகளடி போல்அதிலே
உற்றசங்க ரேகை யுடன்பதும ரேகைகண்டேன். ௩௪௬

---

341. கைவாள் உகிர்க்குறி - கைவாள் என்னத்தக்க நகத்தால் ஏற்பட்ட குறி. கண் மை - கண்ணிலிட்ட மை.

342. வெகுண்டாள் - கோபித்தாள்.

343. என்றாள் - என்று தோழிமாரைத் தாய் கேட்டாள்.

344. மங்கை - நவரத்னமாலை. கண்டதுவும் - அவளை மீண்டும் கண்டதையும். ஆயிழையார் - தோழிமார்.

345. சந்தமுலையார் - தோழிமார். குணமாலை - தோழிமாருள் ஒருத்தி ; தலைவிக்கு அன்பானவள் ; கண்ணி 125 பார்க்க. அசுகையுற்ற வேளை - தலைவியைப் பிரிந்து மீண்டும் வந்து கண்டு அவள் நிலையறிந்து சந்தேகங்கொண்ட சமயத்தில். அசுகை - அசூயை.

346. துரைகள் - நாகம கூளப்ப நாயக்க துரை. அடி - காற்சுவடு. சங்கரேகையும் பதுமரேகையும் பாதத்தில் பொருந்தியிருப்பது சிறந்த புருஷலட்சணம் ; இதைக் கண்டதாகத் தோழி சொல்கிறாள். சோலையில் தலைவி இருந்த இடத்தைச் சுற்றி இச் சுவட்டைக் கண்டாளாம்.

அச்சுவடு கண்ட அசுகையல் லாற்புவனம்
மெச்சு நிலக்கோட்டை வேள்பெரிய நாகேந்த்ரன் ௩௪௮

வேட்டைக்கு வந்தானும், மேளத் தொனியுமந்தக்
காட்டில்வெடித்தொனியும் காதாரக்கேட்ட(து)'என்ருள்.

கேட்டுத் தாய் மகிழ்தல்

'அப்படியோ? சொல், என் அமிர்தகுண மாலேமின்னே!
செப்படிவித் தைத்தொழிலிற் சித்திரத்தைக் கண்டாஞே?

வண்டார் குழலாய்! மதன்பெரிய நாகேந்த்ரன்
கண்டால்நான் ஈன்ற கரும்பைவிட்டுப் போவாஞே?

அந்தத் துரையழகைக் கண்டாலும், நான்ஈன்ற
பைங்தொடியுந் தாஞெருகை பாராமல் மீள்வாளோ?

எம்மையறி யாமல்இவள் எப்படித்தான் கைகலந்தாள்,
நம்மையறி யாமல்அந்தநாயகன்எவ் வாறணேந்தான்?

கன்னம் ஒருவரிட்டாற் காவலஞேடேயுரைப்போம்;
மன்னவனே இந்த வலுமைசெய்தால் ஆர்க்குரைப்போம்?

பாகார் மொழியாளேப் பன்றிமலேச் சாரலுக்குப்
போகாதே என்றுசொன்னேன், புத்தியாய்க் கேட்டாளோ? ௩௫௪

---

347. அல்லால் - அதுமட்டுமன்றி. புவனம் - உலகமுழுதும்.

348. வெடித்தொனி - துப்பாக்கி வெடியின் ஒலி.

349. சித்திரத்தை - சித்திரம் போன்ற என் பெண்ணே.

350. வண்டார் குழல் - வண்டு படியும் கூந்தல்; குண மாலேயே. மதன் - மன்மதனே யொத்த. நான் ஈன்ற கரும்பைக் கண்டால் விட்டுப் போவாஞே. கரும்பு-பெண்; நவரத்னமாலே.

351. ஒருகை பார்த்தல் என்பது உலக வழக்கு.

353. கன்னம் - களவு. காவலன் - அரசன். வலுமை - பலாத்காரம்.

354. பன்றிமலே: 10-ம் கண்ணி பார்க்க.

பேய்வார்த்தை யானாலும் பெற்றபிள்ளை கேட்பதுண்டு,
தாய்வார்த்தை கேளாத் தங்கச்சி மூப்பாச்சே! ௩௫௫

தெண்டிக்கும் மன்னவனைச் சேர்ந்தவலுக் காரியைநான்
கண்டிக்கப் போகாதே, கள்ளி யெனக் கூடாதே!

மானபரன் பெஞ்சை மகராச னைமருவப்
போனவளே யன்றி, இவள் பூவெடுக்கப் போனவளோ?

விந்தைதரும் ஒன்பதூர் வேந்தனுக்கு மோகினிமா
மந்திரமுண் டென்றென் மதலை யறியாளோ?

தூயபுகழ் பெஞ்சைத் துரைக்குநமைப் போல்மடவார்
ஆயிரம்பேர் உண்டென்(று) அரங்கி அறியாளோ?

பூங்கொடிசூழ் தண்டலையிற் பூவெடுக்கப் போனஉயிர்ப்
பாங்கிமார் தாமிருக்கப் பாவைதனைச் சேர்வானேன்?

அந்நாளில் வேதன் அமைத்தபடி யேயொழிய,
மின்னாரை நோவதுவும் வீணே பிதற்றுவதும்; ௩௬௧

---

355. தங்கச்சி - பெண். 'பிள்ளைதான் வயதின் மூத்தால் பிதாவின் சொற்புத்தி கேளான்' என்பது விவேக சிந்தாமணி.

356. தெண்டிக்கும் மன்னவனை - முயற்சியில் வல்லவனை இத் தலைவனை. வலுக்காரி - திறமைசாலி. கண்டிக்கப் போகாது - கண்டித்தல் கூடாது.

357. மானபரன் - மானத்தைப் பெரிதாகக் கருதுபவன்.

358. ஒன்பதூர் வேந்தன்: கூளப்ப நாயக்கன். மோகினி மந்திரம் - பெண்களை மயக்கும் மந்திரம். மதலை - சிறு பெண்.

359. அரங்கி - நடிப்பதில் வல்லவள்; அரங்கு - நாடக மேடை.

360. தண்டலை - சோலை. பாவை - என் மகள்.

361. அந்நாளில் - பிறந்தபோதே. வேதன் - பிரமன். மின்னாரை - தோழியரை அல்லது அவளையே. நோவதுவும் பிதற்றுவதும் வீணே.

நம்மையறி யாமல் நடந்ததல்லால், யாவர்க்கும்
சம்மதிக்கும் காரியமே தையல் நடத்திவந்தாள். ௩௬௨

மன்ன னழுகுக்கென் மகளே மனையாளாம்;
கன்னியழ குக்கும்அந்தக் காவலனே காதலனும்.

மாவடுக்கண் மங்கையென்ன மாதவம்முன் செய்தாளோ?'
பூவெடுக்கப் போனாள், புதைய லெடுத்துவந்தாள்!

பையப் பழம்நழுவிப் பாலில் விழுந்ததுநான்
செய்ததவ மோ, மகள்முன் செய்தபூ சாபலமோ!'

என்று மகளை இருகையால் தான்தழுவி,
'ஒன்றுக்கும் அஞ்சாதே, யோகமுமுன் பங்காச்சே!

வாழ்த்துதல்

'சிந்தமகூ ளேந்த்ரனருள் சேய்பெரிய நாயகனைச்
சொந்தமாய்க் கூடிச் சுகித்துமிக வாழ்ந்தி' ரென்றாள்.

'காவுலவு மின்னே! கனக பல்லக் கேறி, இந்தப்
பூவுலகு கொண்டாடப் புத்திரனைப் பெற்றி' ரென்றாள்.

---

362. தன்னைக் கேட்காமல் செய்துவிட்டாள் என்ற குறை தவிர, இக் கந்தருவ மணம் தனக்குச் சம்மதந்தான் என்று தாய் சொல்லுகிறாள்.

364. மாவடுக் கண் - மாவடுபோன்ற கண்: 'மாவின் வடுவகிரன்ன கண்ணி' என்பது திருவாசகம்.

365. பைய - மெல்ல.

366. யோகமும் உன் பங்காச்சே - உனக்கு நல்ல யோகம் வாய்த்திருக்கிறது.

367. வாழ்ந்திரென்றாள் - வாழ்ந்திரு என்றாள்.

368. கா உலவு மின்னே - சோலையில் உலவிவருகின்ற மின்போன்ற பெண்ணே. கனக பல்லக்கு - பொற்பல்லக்கு. பெற்றிரென்றாள் - பெற்றிரு என்றாள்.

தலைவனில்லத்துக்கு அனுப்புதல்

என்னுமந்த வேளை,சில ஏந்திழையார் சூழ்ந்துவர,
வன்னமணிப் பொற்சிவிகை வாயில்வரக் கண்டாளே.

கண்டாள், மகளைக் கனகபல்லக் கேற்றி இன்பங்
கொண்டாள், குணமாலை கூடச் செலவிடுத்தாள். ௩எ0

சொற்படியே அந்தத் துரைபெரிய நாயகனும்
கற்பகத்தைக் கூடி,அவன் காதல்கொண்ட காதலியாய்ப்

பூதலத்தோர் வாழ்த்தநல்ல புத்திரரைப் பெற்றெடுத்து
மாது நவரத்ன மாலைமகிழ் வுற்றிருந்தாள்.

வாழ்த்து

சீர்வாழி, லோகம் செழித்துமிக வாழி,ஒன்ப
தூர்வாழி, வெள்ளை யுபய கொடிவாழி.

பெஞ்சைநகர் வாழி, பெரியநா கேந்த்ர துரை
கஞ்சமலர் மாது கருணைபெற்று வாழியவே. ௩எச

---

369. என்று தாய் சொன்னபோது, தலைவன் அனுப்பிய அழகிய மணியிழைத்த பொற்சிவிகை யொன்று பெண்கள் சூழ அங்கு வந்தது.

370. குணமாலை என்ற பாங்கியையும் தன் மகளோடு நாயக்க னில்லத்துக்கு அனுப்பினாள்.

372. பூதலத்தோர் - உலகத்தார்.

373. ஒன்பதூர் - தலைவனூர்.

374. கஞ்ச மலர் மாது - தாமரை மலரிலுள்ள இலக்குமி தேவி.

முற்றும்

தனிப்பாடல்கள்

1. கூளப்ப நாயக்கன்

[பின்வரும் ஐந்து பாடல்களும், கலம்பகத்துள் வரும் வலைச்சியார் இடைச்சியார் என்ற உறுப்புக்களைப் போல இவ்வாசிரியர் பாடியனவாகும்.]

வண்ணாத்தியார்

பரிதினனப் புகழ்பரவு சதுரர் வேந்தன்
பாகசா தனன்பெரியான் ஒன்ப தூரான்
விருதுசக்ர குலந்தழைக்கும் பாண்டி நாட்டில்
விரகமொடு வந்திடுவண் ணாத்தி யாரே!
கருதுமெங்கள் மயலழுக்கை நீக்கி, உங்கள்
கணவனையும் கைமாற்றுக் கார னாக்கி,
வரிசையொப்பிச் சேலையெடுத் திடுவீ ராகில்,
மார னுக்கு மாராப்புப் போட லாமே. 1

வலைச்சியார்

நாமகளும் பூமகளும் விளங்கு மார்பன்,
நாவலற்சேர் கொடியகலி யிருளை நீக்கி
மாமதியோன் எனவிருக்கும் ஒன்ப தூரான்
மருவுதமிழ் நாட்டில்வளர் வலைச்சி யாரே!

காமனுக்கு மோகவலை கொடுத்தீர், உங்கள்
கசகரணங் கண்டிலோம், கருதி யேநீர்
தாமரைநூல் வளையத்தைக் காட்டி யேஎந்
தமக்கிரண்டு பிடிகிழங்கு தந்தி டீரே. 2

அகம்படிச்சியார்

வன்னியர்தம் புடைசூழப் பல்லக் கேறி
மறுகில்வரு பெரியகுல நாக மேந்த்ரன்
அன்னசத்ரக் கொடிவிளங்கும் பாண்டி நாட்டில்
அரைக்கீரை விற்கும்அகம் படிச்சி யாரே!
முன்னமே பழக்கமல்லோ எனக்கு நீரும்,
முழுதும்பா தகத்தியாய் விடவொண் ணாது,
சொன்னபடி கோவையிளம் பாலை ஈந்தாற்
சுகம்பெறுவேன் ஆரையுங்கை தொட்டிடேனே. 3

குறத்தியார்

சந்தமது திகழுமந்த மார்பன் பூவிற்
றனதனென்ப தூரான்தன் தமிழ்சேர் நாட்டில்
வந்தபல வாகடமந் திரங்கள் கற்று
மாவடுவை விழியில்வைத்த மாத ராரே!
முந்துகரி நாகமலை எனக்குக் காட்டி
மோகமொடு முத்தமிடு குறியைப் பார்ப்பீர்;
பைந்தொடிநீர் எல்லவர்கை பார்ப்பீ ராகிற்
பண்பாக எனைஒருகை பார்த்தி டீரே. 4

உழத்தியார்

வீறுபெறு கவிவலவர் கலியை ஓட்ட
விருதுபெறு நாகமகூ ளேந்த்ரன் நாட்டில்
ஊறகல மொழிக்கள்ளைக் கொண்டு விற்க
ஊர்மறுகில் வந்துலவும் உழத்தி யாரே!

கூறுமும தரியவாய்த் தென்னங் கள்சேர்
கும்பமது வேளனக்குக் குடிக்க ஆசை,
ஏறுவதா ரிறங்குவதார் என்பீ ராகில்
எனக்கொருசா ணுனுண்டிங் கேற்று வேனே. 5

2. குன்னரங்கன்

தென்னரங்கன் அரங்கனென்பார் வாய்திறவான்
கண்விழியான் திரும்பிப் பாரான்
என்னரங்கன் தூங்கிரங்கன் ஏழையர்பாற்
கருணையுடன் இரங்கா ரங்கன்
மன்னரங்கன் தமிழ்ப்பெருமான் மழவரங்கன்
அளித்தருளும் மைந்த னை
குன்னரங்கா! எனக்கிரங்காய், குழைந்தெழுந்த
தமிழ்க்கிரங்கிக் குழைந்தெ ழாயே. 6

எண்டிசையும் புகழ்படைத்த குன்னரங்க
மகிபாலா! இனிமேல் இந்த
மண்டலத்தை அரசாள ஒப்பிலா
நின்புதல்வன் மழவன் போதும்
விண்டலத்தில் இந்திர னுக் கரசுநிலை
யில்லாமல் வெகுநா ளாக
நண்டளந்த நாழியாக் கிடப்பதால்
விண்ணாள நடந்தி டாயே. 7

[பெருந்தொகை 1361-2.

பெயரகராதி

பெயர்		கண்ணி எண்
அகோபிலமால்	...	3,280
ஒன்பதூர்	...	315,358,373
குடபமா நதி	...	11
கூளேந்திரன்	...	77
சந்தையூர்	...	279
சருவசித்தி வாரணம்	...	294
சிந்தம கூளேந்திரன்	...	24,101,367
சுப்பிரதீப நாவலர்	...	285
திம்மராயர்	...	1,57
திருமலை மன்னன்	...	33
நவபுரி	...	13,256,280
நாகம கூளேந்திரன்	...	164,275
நிகளங்கமல்லன்	...	273,283
நிலக்கோட்டை	...	23,255,347
பரஞ்சோதி முனிவர்	...	5
பன்றிமலை (வராககிரி)	...	10,77,354
பெஞ்சை	...	காப்பு, 71,259,283,296, 303,357,359,374
பெரிய நாகேந்திரன்	...	காப்பு,9,24,25,33,71,94, 104,259, 278, 295, 296, 310,347,350,374
பெரிய நாயகன்	...	1,3,6,73,367,371

இந் நூலாசிரியர் எழுதிய

யான் பெற்ற இன்பம்

(கட்டுரைத் தொகுதி)

"இந் நூலை யான் படிக்கப் புகுந்தபோது, என் கருத்து அதன் சொல்லிலோ சொற்றொடரிலோ செல்லவில்லை. பொருளே என்னை விழுங்கிற்று. இது நூலாசிரியரின் திறம். எழுத்தோவியர்க்கு இந்நூல் விருந்தாகும் என்று நம்புகிறேன்" என்று ஸ்ரீ திரு. வி. கல்யாண சுந்தர முதலியார் இந்நூலைப் புகழ்ந்து கூறுகிறார்.

"வாசிப்பதற்கு விருப்பந் தருகின்ற கட்டுரைத் தொகுதி. ஸ்ரீ அருணாசலம் நல்ல ரசிகர். ஈங்கோய் மலையி லிருந்து திருக்குற்றால மலைச்சாரல் வரை பல விதமான காட்சிகளை நம்முடன் தோழமை பூண்டு, காட்டி அழைத்துச் செல்கிறார்...........அவருடைய நிதான நடையும் நினைவுக் கோவையும் ரசானுபவ நுகர்ச்சிக்கு உற்ற துணையாகிறது" என்று தினமணி புகழுகிறது.

விலை ரூ. 1—8—0

சக்தி காரியாலயம்

சென்னை :: :: மதுரை

Commercial Printing & Publishing House, G. T. Madras